# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT
# 2021

ශ්‍රී ලංකා ජාතික චිත්‍රපට සංස්ථාව

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

NATIONAL FILM CORPORATION OF SRI LANKA

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# ஆண்டறிக்கை
# 2021

**<u>சமர்ப்பணம்</u>**

திகதி - 2022.12.19

எனது இலக்கம் NFC/119/02/01/01

செயலாளர்
வெகுசன ஊடக அமைச்சர் மூலம்,

கலாநிதி பந்துல குணவர்தன அவர்கள்
வெகுசன ஊடக அமைச்சு
163, "எதிசிதிசி மெதுர"
கிருளப்பன மாவத்தை
பொல்ஹேன்கொட
கொழும்பு 05.

**<u>இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் - ஆண்டறிக்கை - 2020</u>**

1980 ஆம் ஆண்டு இலக்கம் 45 இனைக் கொண்ட சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட 1971 ஆம் ஆண்டு இலக்கம் 47 இனைச் சேர்ந்த இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம் 32 (1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு இலக்கம் 38 இனையுடைய நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான பின்வரும் ஆவணங்களுடன் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கின்றேன்.

1. 2021 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கூற்றுக்கள்
2. 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் இலாப நட்ட கணக்குகள், அவை சார்ந்த குறிப்புக்கள் மற்றும் அத் திகதிக்கான இருப்புநிலைப் பதிவேடு
3. 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இப்படிக்கு உண்மையுள்ள,

ஒப்பம் – சட்டத்தரணி தீபால் ஷந்தரத்ன
தலைவர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

ஜீ.ஏ. கித்சிரி
பொது முகாமையாளர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# ஆண்டறிக்கை

01. அறிமுகம்
02. பணிப்பாளர் குழு
03. உள்நாட்டு திரைப்படத் தயாரிப்பு
04. ஆளணி மற்றும் தாபன நிர்வாகம்
05. திரைப்பட விளம்பரம் / சினே அட்ஸ்
06. உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்
07. சினிமாக் கலாசாரம் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள்
08. திரைப்படக் கண்காட்சி
09. உள்நாட்டு வழங்கல்கள் - ஏற்றுமதி மற்றும் இறக்குமதி
10. கணக்காய்வு நடவடிக்கை
11. நிதி நடவடிக்கை
12. சட்ட நடவடிக்கை
13. கலையகம்
14. புலனாய்வு நடவடிக்கை
15. திட்டப் புள்ளிவிவரங்கள் மற்றும் பயிற்சி
16. மருத்துவ உதவி
17. நலன்புரி
18. சமய நடவடிக்கைகள்
19. விளையாட்டுச் சங்கம்
20. தொழிற் சங்கம்
21. நன்றி

## 01. **அறிமுகம்**

1980 ஆம் ஆண்டு இலக்கம் 45 இனைக் கொண்ட சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட 1971 ஆம் ஆண்டு இலக்கம் 47 இனைச் சேர்ந்த இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம் 32 (1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு இலக்கம் 38 இனையுடைய நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் படி வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அவர்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான அறிக்கை.

2021 ஆம் ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 50 ஆவது செயற்பாட்டு ஆண்டுக்கான அறிக்கையாகும்.

## 02. **பணிப்பாளர் குழு**

2021 ஆம் ஆண்டினுள் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் பின்வருமாறு பெயர்க் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

| | **பெயர்** | **பதவி / துறை** |
|---|---|---|
| 1 | கலாநிதி ஜயந்த தர்மதாஸ | தலைவர் - இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் |
| 2 | திரு. ஷந்திரபால லியனகே | பணிப்பாளர் நாயகம் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (உத்தியோகபூர்வமாக) |
| 3 | திருமதி. தரணி அனோஜா கமகே | கலாச்சார பணிப்பாளர் -கலாசார அலுவல்கள் திணைக்களம் (உத்தியோகபூர்வமாக) |
| 4 | திரு.மொஹான் சமரநாயக | பணிப்பாளர் நாயகம் – அரசாங்க செய்தித் திணைக்களம் ( உத்தியோகபூர்வமாக) |
| 5 | கலாநிதி ரவீந்திர ரன்தெணிய | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 6 | திரு. தம்மித் பொன்சேகா | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 7 | கலாநிதி தம்மிக திஸாநாயக | பணிப்பாளர் சபை உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 8 | திரு. ரீ.என்.ஹெட்டியாரச்சி | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 9 | திருமதி.கே.ஏ.டீ.ஆர்.என். ஜயசிங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 10 | திருமதி. டீ.சீ. ஜயதேவ | பணிப்பாளர் சபை உறுப்பினர் ( திறைசேரியின் பிரதிநிதி) |
| 11 | திருமதி. வஸந்தி ஷதுரானி | பணிப்பாளர் சபை உறுப்பினர் (மேற்பார்வையாளர்) |

## 03. **உள்நாட் திரைப்படத் தயாரிப்பு**

2021 **ஆம் ஆண்டுக்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம்**

| | විස්තරය | ප්‍රගතිය(රු. ශත) |
|---|---|---|
| 01. | **<u>உள்நாட்டு திரைப்படங்களைப் பதிவு செய்தல்</u>**<br>**திரைப்படங்களின் எண்ணிக்கை** - 26<br>( ஒரு திரைப்படத்திற்காக ரூபா. 5000.00 என்ற தொகை பதிவுக் கட்டணமாக அறவிடப்படும்)<br><br>திரைப்படங்களின் பெயர் மாற்றத்திற்காக அறவிடல் – 02 திரைப்படங்கள்<br>(ஒரு திரைப்படத்திற்காக ரூபா. 3000.00 வீதம் அறவிடப்படும்) | 90,000.00<br><br><br><br>12,000.00 |
| 02. | திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்பட<br>தொழில்நுட்பவியலாளர்களுக்கான கூட்டுத்தாபன நிதியம்.<br>• **<u>ஓய்வூதியம் செலுத்துதல்.</u>**(ஒருவருக்கு ரூபா. 5000.00 வீதம்)<br>சனவரி - 160 பேருக்கு,<br>பெப்ரவரி – 159 பேருக்கு,<br>மார்ச் - 156 பேருக்கு,<br>ஏப்ரல் - 155 பேருக்கு,<br>மே - 154 பேருக்கு,<br>ஜூன் – 153பேருக்கு,<br>ஜூலை – 146 பேருக்கு,<br>ஆகஸ்ட் – 145 பேருக்கு,<br>செப்டம்பர் – 144 பேருக்கு,<br>ஒக்டோபர் – 143 பேருக்கு<br>நவம்பர் மற்றும் திசெம்பர் - 141 பேர் என்ற வீதம், | 800,000.00<br>795,000.00<br>780,000.00<br>775,000.00<br>770,000.00<br>765,000.00<br>730,000.00<br>725,000.00<br>720,000.00<br>715,000.00<br>1,410,000.00<br>8,985,000.00 |

| | | |
|---|---|---|
| 03. | தனிச் சிறப்பு வாய்ந்த கலைஞர்களைப் பாராட்டுதல் :<br><br>**<u>மருத்துவ உதவித திட்டங்கள்.</u>**<br>➢ திரு. ஆனந்த விக்கிரமகே<br>➢ திரு. சமன் வீரமன்<br>➢ திரு. வில்சன் கருணாரத்ன<br>➢ திரு. எம்.எம். முதுன்நாயக<br>➢ திருமதி. இந்திராவதி<br>(ஒருவருக்கு ரூபா. 50,000.00 வீதம் வழங்கல்)<br><br>**<u>மரண இறுதிச்சடங்கு உதவி வழங்கல்.</u>**<br>➢ திரு. ஜயலால் ரோஹன - 25,000.00 வழங்கல்<br>➢ திருமதி. விஷாகாக சிரிவர்தன - 50,000.00 வழங்கல் | <br><br>250,000.00<br><br><br><br><br><br><br><br><br>75,000.00 |
| 04. | **<u>திரைப்பட இறக்குமதி</u>**<br><br>2021 ஆம் ஆண்டிற்கான திரைப்பட விநியோகஸ்தர்களை பதிவு செய்வதற்காக விண்ணப்பங்களைக் கோரல்.<br>(**ஒரு விண்ணப்பப்படிவம் ரூபா**. 25,000.00 **வீதம்** )<br>அதற்கமைய, 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ள விநியோகஸ்தர்களின் எண்ணிக்கை - 17 ஆகும்.<br><br>இவ் வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட தமிழ்/ஆங்கிலம் /ஹிந்தி மற்றும் ஏனைய மொழிகளில் இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்களின் எண்ணிக்கை - 82 ஆகும்.<br>( **ஒரு திரைப்படத்திற்காக ரூபா**. 5,000.00 **வீதம்** ) | <br><br>425,000.00<br><br><br><br><br>410,000.00 |
| 05. | **<u>வெளிநாட்டு படப்பிடிப்புக்களுக்கான அங்கீகாரத்தை வழங்குதல்.</u>**<br><br>08 - **ஆவண நிகழ்ச்சித்திட்டங்கள்**<br>- ரூபா. 50,000.00 வீதம் 01 நிகழ்ச்சித்திட்டம்<br>- வெளிநாட்டு உறுப்பினர்கள் 02 பேருக்கு ( ஒருவருக்கு ரூபா. 5,000.00 வீகிதம் )<br>- ரூபா. 25,000.00 வீதம் 07 நிகழ்ச்சித்திட்டங்கள்<br>- வெளிநாட்டு உறுப்பினர்கள் 21 பேருக்கு ( ஒருவருக்கு ரூபா. 2,000.00 வீகிதம் )<br><br>02- **வெளிநாட்டுத் திரைப்படங்கள்**<br>- 02 திரைப்படங்களுக்கும் ரூபா. 150,000.00 என்ற விகிதம் 92 வெளிநாட்டு உறுப்பினர்களுக்கு ( ஒருவருக்கு ரூபா. 2,000.00 வீகிதம்)<br><br>01 – **குறுந் திரைப்படம்**<br>01 திரைப்படத்திற்கு ரூபா. 75,000.00 என்ற விகிதம்<br>- 01 வெ ளிநாட்டு உறுப்பினருக்காக ( ஒருவருக்கு ரூபா. 2,000.00 என்ற விகிதம்)<br><br>T.V Drama – 01<br>T.V Drama 01 – நிகழ்ச்சிக்கு<br>- 40 வெ ளிநாட்டு உறுப்பினர்களுக்கு ( ஒருவருக்கு ரூபா. 2,000.00 விகிதம்) | <br><br><br>50,000.00<br>10,000.00<br>175,000.00<br>42,000.00<br>277,000.00<br><br>300,000.00<br>184,000.00<br>484,000.00<br><br>75,000.00<br>2,000.00<br>77,000.00<br><br>75,000.00<br>80,000.00<br>155,000.00 |

| | | |
|---|---|---|
| | Reality Series– 01<br><br>01 நிகழ்ச்சிக்காக<br>- 58 வெ ளிநாட்டு உறுப்பினர்களுக்கு ( ஒருவருக்கு ரூபா. 2,000.00 என்ற விகிதம்) | <br><br>75,000.00<br>116,000.00<br>191,000.00 |

06. <u>ஏனைய (விசேட சேவைகள்)</u>

I. திரைப்படக் கலைஞர்கள் மற்றும் பழைய திரைப்படங்களுக்கான அடையாளத்தை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்குதல்.

II. திரைப்படக் கலைஞர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

III. இலங்கை சுங்கத்திற்கு தடைநீக்கச் சான்றிதழ்களை வழங்குதல்.

IV. திரையரங்குகளுக்கு வரிச் சலுகை வழங்குவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உறுதிப்படுத்தல் கடிதங்களை வழங்குதல்.

V. இந்நாட்டில் படமாக்கப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்படங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளுக்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கமெராக்கள் உள்ளிட்ட தொழில்நுட்ப உபகரணங்களுக்கு இலங்கை சுங்கத்திடம் உத்தரவாதம் பெற்று தடைநீக்கச் சான்றிதழை வழங்குதல்.

VI. திரைப்படக் கலைஞர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக சலுகைகள் வழங்குதல்.

VII. சினிமாக் கல்வியைப் பெறும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு சினிமாத் தகவல்களை வழங்குதல் .

VIII. திரைப்படத் தயாரிப்பு மற்றும் திரைப்பட இறக்குமதிக்கான நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு திரைப்பட கூட்டுத்தாபனத்திற்கு அவசியப்படும் தகவல்களுடன் முன்வைத்தல்

IX. கூட்டுத்தாபனம் (ரித்மா) சபையின் கீழ் காட்சிப்படுத்தலுக்காக வெ ளியிடப்படும் உள்நாட்டு மற்றும் வெ ளிநாட்டு திரைப்படங்களை விநியோகித்தல் ஒப்பந்தத்தை தயாரிக்க அவசியப்படும் நடவடிக்கை எடுத்தல்.

X. ஊடகவியலாளர்களுக்கு திரைப்படங்களை பார்வையிட அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

## 04. **ஆளணி மற்றும் தாபன நிர்வாகம்**

| | |
|---|---|
| 2021.01.01 **ஆந் திகதிக்கான ஆளணி** | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | 186 |
| நிரந்தரப்படுத்தப்பட்ட எண்ணிக்கை | 129 |
| | |
| 2021 வருடத்தில் வெளியேறிச் சென்றவர்களின் எண்ணிக்கை | |
| ஓய்வு பெற்ற பதவியணியினர் | 02 |
| சேவையிலிருந்து இராஜினாமாச் செய்த பதவியணியினர் | 07 |
| | |
| 2021.12.31 ஆந் திகதிக்கான நிரந்தர ஆளணி | 120 |
| | |
| ஏனைய பணியாட் தொகுதினர் | |
| தலைவர் | 01 |
| | |
| 2021.12.31 மொத்த பணியாட்தொகுதியினர் | 121 |

**நிறுவனக் கட்டுப்பாடு மற்றும் பணியாளர் தேவைகளைப் பூர்த்தி செய்தல்**

நிறுவன பணியாளர் கட்டுப்பாடு தொடர்பாக பின்பற்றப்படும் நடைமுறைகள் அப்படியே முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 05. **திரைப்பட விளம்பரம் / சினே அட்**

| மாதம் | திரைப்படம் | செய்தித்தாள் விளம்பரத்தின் வருமானம் -2021 | | | விளம்பர பதாகைளை காட்சிப்படுத்தல் வருமானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | 15% விலைக் கழிவு | 10% விசேட விலைக் கழிவு | 10% சேவைக் கட்டணம் | | |
| சனவரி | மிஸ் ஜெனிஸ் | 13,632.00 | 7,724.80 | 9,644.18 | 18,000.00 | |
| | ஷெலீனா | - | - | - | 19,500.00 | |
| | ரூகட பென்சி | - | - | - | 30,000.00 | 110,500.98 |
| | ஹதர வரம் | - | - | - | 12,000.00 | |
| பெப்ரவரி | மிஸ் ஜெனிஸ் | 5,208.00 | 2,951.20 | 3,684.49 | - | |
| | அபட செதுன அபே லோகய | 12,798.00 | 5,416.20 | 7,530.43 | 12,000.00 | 49,588.32 |
| மார்ச் | அபட செதுன அபே லோகய | 4,488.20 | 2,543.20 | 3,175.11 | | |
| | கலம்போ | - | - | - | 12,000.00 | 34,206.51 |
| | ஹதரவரம் | - | - | - | 12,000.00 | |
| ஏப்ரல் | கபடி | 10,090.50 | 5,717.95 | 7,138.69 | 12,000.00 | |
| | நிம்ஹிம் | - | - | - | 6,000.00 | |
| | கலம்போ | - | - | - | 6,000.00 | |
| | உதுரு சுலக | - | - | - | 6,000.00 | 52,947.14 |
| ஒக்டோபர் | உதுரு சுலக | - | - | - | 6,000.00 | 6,000.00 |
| நவம்பர் | நிஹட செவனலி | - | - | - | 12,000.00 | 12,000.00 |
| திசெம்பர் | ஹவதரண | 15876.00 | 8996.40 | 3820.32 | 12,000.00 | |
| | கவுருத் | 1920.00 | 1088.00 | 1358.34 | 12,000.00 | |
| | தன்னே னா | - | - | - | 12,000.00 | |
| | கினிமல் | - | - | - | 6,000.00 | |
| | பொகுரு நிஹட | - | - | - | 12,000.00 | 87,059.06 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | செவனலி ஜங்கி ஹொரா | | | | | |
| **மொத்தம்** | | 64,012.70 | 34,437.75 | 36.351.56 | 217,500.00 | 352,302.01 |

- மே மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையான 05 மாத காலத்தினுள் கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை ஏற்பட்டதனால் விளம்பர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 2021.01.01 – 2021.12.31 **ஆந் திகதி வரை விளம்பரச் செலவுகள்**

| **தொடரிலக்கம்** | **செலுத்தப்பட்ட நிறுவனம்** | **தொகை ரூபா..** |
|---|---|---|
| 01 | Wijaya News Paper Ltd | 71,912.43 |
| 02 | Ceylon News Paper (Pvt) Ltd | 19,828.80 |
| 03 | Wijaya News Paper Ltd | 88,469.48 |
| 04 | Wijaya News Paper Ltd | 80,298.37 |
| 05 | Wijaya News Paper Ltd | 98,020.38 |
| மொத்தம் | | 358,529.46 |

## 2021.01.01 – 2021.12.31 **ஆந் திகதி வரை கூட்டுத்தபான அறிவித்தலுக்கான செலவுகள்**

| **தொடரிலக்கம்** | **செலுத்தப்பட்ட நிறுவனம்** | **தொகை ரூபா..** |
|---|---|---|
| 01 | The Associated News Papers of Ceylon Limited | 92,947.50 |
| 02 | | 128,542.95 |
| 03 | | 125,398.80 |
| 04 | | 74,358.00 |
| **மொத்தம்** | | 421,247.25 |

**<u>சினிமாக் கலைஞர்களின் பெயர்ப் பட்டியல்</u>** <u>2020 –</u> **<u>அனுசரணை அறிவித்தலுக்கான கிடைப்பனவுகள்</u>**

| நிறுவனம் | **பற்றுச்சீட்டு இலக்கம்** | **தொகை ரூபா.** |
|---|---|---|
| டயலோக் ஆசியாடா கம்பெனி | 16240 | 18,700.00 |
| சாதி அட்வடைசின் | 15570 | 18,700.00 |
| த பில்ம் டீம் நிறுவனம் | 16686 | 30,250.00 |
| வீரமன் பிரதார்ஸ் | 16815 | 30,250.00 |
| பில்ம் லொகேஷன் நிறுவனம் | 16852 | 35,750.00 |
| **மொத்தம்** | | 133,650.00 |

<u>சினிமாக் கலைஞர்களின் பெயர்ப் பட்டியல் – 2020 விற்பனை செய்தல் 2021.01.01 – 2021.12.31</u> **<u>ஆந் திகதி வரை</u>**

| **மாதம்** | **பிரதிகளின் எண்ணிக்கை** | **தொகை ரூபா.** |
|---|---|---|
| ஜனவரி – திசெம்பர் | 99 | 24,750.00 |

**பிரதியொன்றின் விலை ரூபா**. 250/-

## 06. **கல்வி மேம்பாடு மற்றும் கலாச்சாரம்**

### "வாழ்விற்கு சினிமா" சினிமா பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டம்

2021 ஆம் ஆண்டில் 02 சினிமா பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

- 2021.11.17 - நகர்ப்ற குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை

Covid -19 தொற்றுநோய் காரணமாக நிகழ்ச்சிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

### சினிமாக் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக திரைப்பட விவாத உரையாடல் நிகழ்ச்சிகளை நடத்துதல்

2021 ஆம் ஆண்டில் 02 உரையாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

- 2021 மார்ச் மாதம் 19 – **நன்தார அரசியலின் சினிமா அழகியல்**
  விரிவுரையாளர் – திரு. ஜாக்சன் ஆண்டனி
- 2021 ஏப்ரல் மாதம் 09 - **அட்சஸ் நே வெளிப்படுத்தல் அரசியல் உரையாடல்**
  விரிவுரையாளர் – கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. தம்ம திஸாநாயக்க

  Covid -19 தொற்றுநோய் காரணமாக அடுத்து வரவிருக்கும் நிகழ்ச்சிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

### திரைப்படவியல் டிப்ளோமா பாடநெறி 2021

2021 ஆம் ஆண்டு டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

43 மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

### திரைப்பட வெளியீடுகளை பிரசுரித்தல்

**திரைப்படச் சஞ்சிகை**

2021 ஆம் ஆண்டின் முதல் இதழ் மற்றும் 2021 ஆம் ஆண்டின் இரண்டதம் இதழ் வெளியிடப்பட்டுள்ளது.
சினிமா வெளியீடுகளின் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் - **ரூபா**.44,039.00 **ஆகும்**.

## 07. **திரைப்பட விநியோகம்**

### 1. **திரைப்படங்களை காட்சிப்படுத்தல்**

- ❖ 2021 ஆம் ஆண்டினுள் ரித்மா சபையின் கீழ் 44 திரையரங்குகளில் செயற்பட்டன.

### 2. **திரைப்படங்களை விடுவித்தல்**

- ❖ திரையரங்குகள் 44 இற்காக ரித்மா சபையினால் திரைப்படங்கள் காட்சிக்காக விடுவிக்கப்பட்டுள்ளன.
- ❖ 2021 ஆம் ஆண்டினுள் ரித்மா சபை மற்றும் ஏனைய சபைகளுடன் கூட்டிணைந்து திரைப்படங்களை காட்சிக்காக விடுவிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- ❖ ரித்மா சபையினால் 04 சிங்கள திரைப்படங்கள் காட்சிக்காக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ❖ இவ்வருடம் சனவரி மாதம் முதல் வழங்குநர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட 01 தமிழ்த் திரைப்படம், 04 ஹிந்தித் திரைப்படங்கள் மற்றும் 02 ஆங்கிலத் திரைப்படங்கள் மற்றும் பிற மொழியிலான திரைப்படம் 01 உம் ரித்மா சபையினாலும் பிற சபை திரையரங்களினாலும் மற்றும் கூட்டிணைந்து ரித்மா சபையினால் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
  (கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்கில் இருந்து (கோட்டா) திரைப்படங்களைப் பெற்று ரித்மா சபையின் முலம் காட்சிப்பட்டுத்த விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.)
- ❖ 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோவிட் 19 தொற்று நோய் காரணமாக முதலாம் மற்றும் இரண்டாம் அலைகளுக்கு சுகாதார அடிப்படையில் திரையரங்குகள் பல மாதங்கள் மூடிவைக்கப்பட்டது.

### 3. **திரைப்பட வாடகை**

பணப்புத்தகத்தின் படி, எங்கள் (ரித்மா) சபையினால் மற்ற சபைகளுக்கு வழங்கிய திரைப்படங்களுக்கான பணம் கிடைக்கப்பெறவில்லை.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள படி எங்கள் சபையின் திரையரங்குகளில் மற்ற சபைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட திரைப்படங்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது.

- ❖ லங்கா பில்ம்ஸ் டிஸ்ட்டிரிபியுடார்ஸ் கம்பெனி (தனியார்) நிறுவனம் = ரூபா. 189,457.51
- ❖ ஈ.ஏ.பி. பில்ம்ஸ் அன்ட் இம்போடார்ஸ் (தனியார்) நிறுவனம் = ரூபா. 2,009,559.09
- ❖ சினமா என்டர்டென்மென்ட் (தனியார்) நிறுவனம் = ரூபா. 516,116.65

## 08. உள்நாட்டு வழங்கலின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள்

01. சரசவி கலையகத்திற்கான திரைப்படப் பின் தயாரிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக படத் தொகுப்புப் பிரிவின் வர்ண கலவை அமைப்பை நிறுவுதல்.
02. சரசவி கலையகத்திற்கான ஒப்பனை கூடம் மற்றும் அலுவலக வசதிகளை மேம்படுத்துதல். வர்ண கலவை கூடத்தை பிரிவுகளான பிரித்து வேறுபடுத்தல்.
03. சரசவி கலையகத்திற்கான உரையாடல் ஒலிப்பதிவிடும் கூடம் மற்றும் மேலதிக ஒலிப்பதிவு கலையகத்துக்கான ஒலி உபகரணங்களை கொள்வனவு செய்தல்.
04. சுகாதார வசதிகளை மேம்படுத்தல் மற்றும் தரங்கனீ திரையரங்கின் ஏனைய பழுதுபார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
05. தரங்கனீ திரையரங்கில் பொது மக்கள் அழைப்பு அமைப்பை நிறுவுதல்.
06. தரங்கனீ திரையரங்கின் 7.1 ஒலி அமைப்பைச் சரிசெய்தல் மற்றும் பழுதுபார்த்தல்.
07. கல்விக் கலாசார ஊக்குவிப்புப் பிரிவிற்கு DSLR ஒரு கமெரா மற்றும் கமெரா உபகரணங்களின் தொகுப்பையும் வழங்குதல். (கமெரா மற்றும் ஒளிரூட்டல் உபகரணங்கள்)
08. திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தேவைகளுக்கு ஏற்ப தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அலுவலக கடித ஆவணங்கள் மற்றும் பிற உபகரணங்களை பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் படி கொள்வனவு செய்தல் மற்றும் வழங்குதல்.
09. முகவர் நிறுவனங்களுடன் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு உரித்தான சேவை ஒப்பந்தங்களை இற்றைப்படுத்தி பேணிச்செல்லல்.
10. வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் வாகனங்களை காப்புறுதி செய்தலுக்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
11. கூட்டுதாபனத்தின் தேவைகளுக்கு ஏற்ப தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கைகளை 14மேற்கொள்ளல்.

## 09. **உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் காட்சிகள் மற்றும் பணிகள் மற்றும் இணைந்துள்ள இலக்குகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்படும் மற்றும் உண்மையான பிரதிபலனுக்கிடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கு அவசியப்படும் ஒத்துழைப்பை வழங்குவதற்கு நிதி, நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி கட்டமைப்புக்களின் இணங்காமைக்கு இடையிலான இடைவெளியை குறைப்பதற்குப் பதிலாக இப்பிரிவு நடவடிக்கை எடுத்துவருகின்றது

வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களின் எண்ணிக்கை - 03 ஆகும்.

நடாத்தப்பட்ட திகதிகள் - 2021/01/06
2021/04/05
2021/07/27

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கட்டமைப்பு

2021.01.06

| **பெயர்** | **பதவி** |
|---|---|
| திருமதி. டீ. சீ. ஜயதேவ | குழுத் தலைவர் ( திறைசேரிப் பிரதிநிதி) |
| திரு. நாலக களுவெவ | குழு உறுப்பினர் |
| கலாநிதி ரவீந்திர ரன்தெனிய | குழு உறுப்பினர் |
| திரு. தம்மித் பொன்சேகா | குழு உறுப்பினர் |
| திரு. விமல் ஆர். கமகே | பிரதம உள்ளக கணக்காய்வாளர் – புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு |
| திருமதி. ஷதுரானி த சில்வா | கணக்காய்வு அதிகாரி –தேசிய காணக்காய்வு அலுவலகம் |

2021.04.05

| பெயர் | பதவி |
|---|---|
| திருமதி. டீ. சீ. ஜயதேவ | குழுத் தலைவர் ( திறைசேரிப் பிரதிநிதி) |
| கலாநிதி ரவீந்திர ரன்தெணிய | குழு உறுப்பினர் |
| திரு. தம்மித் பொன்சேகா | குழு உறுப்பினர் |
| திரு. விமல் ஆர். கமகே | பிரதம உள்ளக கணக்காய்வாளர் – புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு |
| திரு. எம்.கே. ஜயசேகர | கணக்காய்வு அதிகாரி –தேசிய காணக்காய்வு அலுவலகம் |

2021.07.27

| பெயர் | பதவி |
|---|---|
| திருமதி. என்.பி. அநூஜா ரோஷிணி ஜயவர்தன | குழுத் தலைவர் ( திறைசேரிப் பிரதிநிதி) |
| கலாநிதி ரவீந்திர ரன்தெணிய | குழு உறுப்பினர் |
| திரு. தம்மித் பொன்சேகா | குழு உறுப்பினர் |
| திருமதி. அஜிதா குமாரி லக்ஷ்மன் | பிரதம கணக்காளர் – புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ( கலாசாரப் பிரிவு) |
| திரு. எம்.கே. ஜயசேகர | கணக்காய்வு அதிகாரி –தேசிய காணக்காய்வு அலுவலகம் |

## 10. **நிதி நடவடிக்கைகள்**

### 01. **வருமான மூலங்கள்**

2020 - 2021 ஆம் ஆண்டுக்கான உண்மையான வருமானம் மற்றும் 2021 ஆம் ஆண்டின் பாதீட்டு வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| வருமானம் | 2020 **உண்மையான** **ரூபா.மி.** | 2021 **உண்மையான** **ரூபா.மி.** | **குறைதல் / அதிகரித்தல்** (%) | 2021 **வரவு செலவுத் திட்டம்** ரூபா. மில். |
|---|---|---|---|---|
| விநியோகிப்புக் கழிவுகள் - உள்நாட்டு | 4.1 | 1.8 | (56.1) | 38.5 |
| வெளிநாட்டு | 7.3 | 12.0 | 64.4 | |
| அதிகரித்தல் ( கூட்டுத்தபான நம்பிக்கை நிதியம்) | 1.3 | 2.1 | 61.5 | 8.5 |
| மேலதிகக் கட்டண விசாரனை அபராதத் தொகை மற்றும் பிற | 2.5 | 1.1 | (56) | 6.0 |
| சினே அட்ஸ் கழிவுகள் | 0.3 | 0.1 | (66.7) | 1.1 |
| கலையகத்தின் வருமானம் | 1.3 | 0.5 | (61.5) | 3.0 |
| வர்த்தக செயற்பாடுகள் | 0.8 | 0.7 | (12.5) | 2.3 |
| **செயற்பாட்டு வருமானம்** | 17.6 | 18.3 | 3.9 | 59.4 |
| **ஏனைய வருமானங்கள்** | 49.7 | 48.7 | (2.0) | 75.6 |
| **திறைசேரியிலிருந்து - சனாதிபதி விருது வழங்கும் விழாவிற்கு** | 0 | 0 | 0 | 0 |
| **மீண்டுவரும் செலவினங்களுக்கான வரவுகள்** | 90 | 100 | 11.1 | 100 |
| **மொத்த வரவுகள்** | 157.3 | 167 | 6.2 | 235.0 |

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது செயற்பாட்டு வருமானம் 2021 இல் 2020 ஆம் ஆண்டினை விட 3.9% இனால் அதிகரித்துள்ளதைக் காட்டியுள்ளது. உள்நாட்டு விநியோகக் கழிவுகள் 56.1% இனால் குறைவடைந்து அதற்கு நிகராக வெளிநாட்டு விநியோகக் கழிவுகள் 64.6% இனால் அதிகரித்து செயற்பாட்டு வருமானம் அதிகரிப்பதற்கான பிரதான காரணமாகும்.

02. <u>**செலவு மூலங்கள்**</u>

2020,2021 ஆம் ஆண்டுக்கான உண்மையான செலவுகள் மற்றும் 2021 ஆம் ஆண்டின் பாதீட்டு வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| **செலவுகள்** | 2020 **உண்மையான** ரூபா.மி. | 2021 **உண்மையான** ரூபா.மி. | **குறைதல் / அதிகரித்தல்** (%) | 2021 **வரவு செலவுத் திட்டம்** ரூபா.மி. |
|---|---|---|---|---|
| பணியாளர் ஊதியம் | 91.7 | 89.5 | (2.4) | 115.1 |
| பயண மற்றும் பிழைப்பூதியப் படி | 0.5 | 0.4 | (20.0) | 3.2 |
| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 5.1 | 5.6 | 9.8 | 12.3 |
| பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்புத் தேய்மானங்கள் | 22.8 | 25.3 | 10.9 | 40.2 |
| தேசிய திரைப்பட விழாக்கள் | 0 | 0 | 0 | 33.2 |
| விற்பனைச் செலவுகள் | 0.06 | 0.7 | 1066 | 4.2 |
| போக்குவரத்து தொடர்புகள், தேவைகள் மற்றும் பிற | 22.9 | 21.6 | (5.6) | 35.1 |
| அறவிட முடியாக் கடன் ஒதுக்குதல் | 0.1 | 1.6 | 1500 | 0.5 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 12.5 | 2.4 | (80.8) | 4.5 |
| திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் நிதியம் | 0.5 | 10.5 | 2000 | 15.7 |
| **மொத்தச் செலவு** | 156.2 | 157.6 | 0.9 | 264.0 |

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டின் செலவுகள் 0.9% இனால் அதிகரித்துள்ளது.

| | 2020<br>ரூ.மி. | 2021<br>ரூ.மி. | % |
|---|---|---|---|
| செயற்பாட்டு வருமானம் | 17.6 | 18.3 | (3.9) |
| **குறைந்தது** | | | |
| செயற்பாட்டு செலவுகள் | 156.2 | 157.6 | 0.9 |
| செயற்பாட்டு இலாபம் / நட்டம் | (138.6) | (139.3) | 0.5 |
| **சேர்க்கப்பட்டது** | | | |
| பிற வருமானங்கள் | 49.7 | 48.7 | (2.0) |
| வருடத்தின் இலாபம் / நட்டம் | (88.9) | (90.6) | 1.91 |
| **சேர்க்கப்பட்டது** | | | |
| திறைசேரியிலிருந்து - சனாதிபதி விருது விழாவிற்காக | - | - | - |
| மீண்டுவரும் செலவினங்களுக்கான வரவுகள் | 90 | 100 | 11.1 |
| மிகை | 1.19.4 | 754.5 | |

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டின் செயற்பாட்டு இலாபம் 0.5% இனால் அதிகரித்துள்ளது. ஆனால் திறைசேரியின் மீண்டுவரும் செலவீனங்களுக்கான கிடைப்பனவுகளின் சீராக்கத்தின் பின்னர் 11.1% மிகையை எடுத்துக் காட்டுகிறது.

## 03. நிலையான சொத்துக்கள்

2021 ஆம் ஆண்டின் அலுவலக உபகரணங்கள் மற்றும் குளிரூட்டும் சாதனங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா. 0.37 மில்லியனும், BAW கூடத்திற்காக ரூபா. 11.2 மில்லியனும், கலையகத்தின் இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 4.6 மில்லியனும், செலவிடப்பட்டுள்ளது. மேலும், கலையகக் கட்டிடத்திற்காக ரூபா. 7.3 மில்லியனும், சினிமா கட்டிடத் தொகுதிக்கு ரூபா. 2.5 மில்லியனும், அருவ சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 6.3 மில்லியனும் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 0.6 மில்லியனும் முடிவுறாத பணிகளாக காட்டப்பட்டுள்ளது.

## 04. <u>நடைமுறைச் சொத்துக்கள்</u>

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது நடைமுறைச் சொத்துக்கள் ரூபா. 87 மில்லியனால் குறைவடைந்துள்ளது. நடைமுறைச் சொத்துக்களின் கீழ் உள்ள நிலையான வைப்புக்களை நீண்ட கால முதலீடாக நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

## 05. <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் திரைப்பட வாடகைக் கடனாளிகள் அதிகரித்தமையால் 9.2% நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்துள்ளன.

# 11. சட்டப் பிரிவு

### 2021 ஆம் ஆண்டினுள் சட்டப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

- கூட்டுத்தாபனம் ஒரு தரப்பாக அமைந்த வழக்கு தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாள் கோப்பிடல் மற்றும் குறித்த நீதிமன்றத்தில் கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாக தோற்றுதல்.

- தொழில் திணைக்களத்திற்கு முன்னிலையில் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்காக கூட்டுத்தாபனத்திற்குப் பதிலாக தோற்றுதல்.

- மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படும் முறைப்பாடுகளுக்காக கூட்டுத்தாபனத்துக்கு பதிலாக தோற்றுதல்.

- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் திரைப்படங்களைத் தயாரித்தல் மற்றும், விநியோகித்தல் இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்களை விநியோகித்தல் தொடர்பாக மற்றும் திரைப்படத் தயாரிப்புக்கள் / கலையகச் சேவைகள் / பிரதிகளை அச்சிடல் / திரையரங்குகளுக்கான கடன் தொகையை வழங்குதல் மற்றும் சேவைகளை வழங்குதல் உள்ளிட்ட சகல சட்டரீதியான ஒப்பந்தங்களையும் தயாரித்தல் மற்றும் கையொப்பமிடல்.

- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு ஆதரவு வழங்கும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் வேறு நடவடிக்கைகள் தொடர்பாக சகல சட்டரீதியான ஒப்பந்தங்களையும் தயாரித்தல் மற்றும் கைச்சாத்திடல்.

- அன்றாட தேவைகளுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு பிரிவிற்கும் அனுப்பப்படும் சட்டரீதியான பிரச்சினைகளுக்கான ஆலோனைகளை வழங்குதல்.

## 12. கலையக சேவைகளை வழங்குதல்

பின்னைய தயாரிப்பு மட்டத்தில் காணப்படும் திரைப்படங்களுக்கான தொழில்நுட்பச் சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல் தலுகம சரசவி கலையகத்தின் பிரதான முக்கிய பணியாகக் காணப்படுகின்றது.

இந்த வருடமும், கலையகத்தின் பின்வரும் பிரிவுகளில் இருந்து உள்நாட்டு ரீதியாக திரைப்படத் தயாரிப்பாளர்களுக்குத் தேவைப்படும் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

1. ஒலிப் பிரிவு (Digital)
2. நேரியல் பாதுகாப்பு பிரிவு (Digital)
3. பாதுகாப்புப் பிரிவு (Analogue)
4. பிந்தைய தயாரிப்பு உபகரணங்களின் பாதுகாப்புக் கூடம்
5. திரைப்பட பாதுகாப்புக்கூடம்
6. திரைப்படம் மற்றும் ரூபவாஹினி படப்பிடிப்புக் கலையகம்

2021 ஆம் ஆண்டில் சரசவி கலையரங்கின் மூலம் வழங்கப்பட்ட சேவைகள்,

**ஒலிப் பிரிவு**

| | |
|---|---|
| 1 | ஆயு |
| 2 | Buffalo Travels |
| 3 | சிஹின சமீகரண |
| 4 | Diploma in Cinematoghy |
| 5 | மொணரவில |
| 6 | கதிர திவ்ய ராஜ |
| 7 | 1970 லவ் ஸ்டோரி |
| 8 | சீகிரி |

9 Happy Birthday
10 மாரியா
11 Monkey Man
12 ஓலுவ ஜபன் கத ஜேர்மன்
13 Suppire Sri Lanka

**படத்தொகுப்புப் பிரிவு**

1 Buffalo Travels
2 ஆதர பூஜாசனே
3 சுமிதுரு நலுவா
4 எல்ல லக பெம்வதியோ
5 யகட தியணியோ
6 நவ தெமோதர பாலம
7 பிரதமர் மஹிந்த ராஜபக்க்ஷ – அறிக்கை நிகழ்ச்சி

**படப்பிடிப்பு செய்தல்**

1 டெடீ மியுசிக் பேன்ட்
2 OPPO F19 Phone Launch
3 அறிக்கை நிகழ்ச்சிகள்
4 Mobile - commercial
5 தெரண - champion star
6 Product launch
7 போயா தின நிகழ்ச்சி
8 SLT Mobitel no dream to big

**பாதுகாப்புக்கூடம்**

1. பழைய காப்பகத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள திரைப்படங்களில் சுமார் 150 படங்கள் பாதுகாப்புச் செய்யும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

2. கடந்த ஆண்டு பாதுகாப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களில் சுமார் 125 படங்கள் இரசாயனங்களால் சுத்தம் செய்யப்பட்டு, நிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு புதிய பிளாஸ்டிக் கொள்கலன்களில் வைக்கப்பட்டு பாதுகாப்புக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

## ஏனைய பணிகள்

1. 2021 ஜனவரி 21 ஆந் திகதியன்று, இலங்கை சினிமாவின் 74 ஆவது ஆண்டு மற்றும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி, சரசவி கலையகத்தின் படத்தொகுப்புக் கூடத்தை இற்றைப்படுத்தி **டைடஸ் தொடவத்த படத்தொகுப்புக் கூடம்** என்ற பெயரில் பெயரிடப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2. அன்றைய தினமே திரு. தம்மித் பொன்சேகா இயக்கிய 'பபலோ ட்ரவலர்', திரைப்படத்தின் புதிதாக முன்கூட்டிக் காட்டப்படும் மாதிரி விளம்பரத் திரைப்படத் தொகுப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

3. திரைப்படக் கூட்டத்தில் ஒப்பனைக் கூடமொன்றினை தயாரிப்பதற்கு அவசியப்படும் அளவீடுகள் மற்றும் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் அவ்வொப்பனைக் கூடத்தின் மற்றும் வர்ணக் கலவைப் பிரிவிலிருந்து, அலுவலகப் பிரிவினை பிரித்துவேறுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் 2021 திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

4. 2021.03.25 ஆந் திகதி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பொறியியலாளர் திரு. பிரியந்த வைத்தி ய சேகர அவர்களினால் ஒலிப் பிரிவின் 7.1 ஒலி அறையின் திரைச்சீலைகள் மற்றும் தரை விரிப்புக்கள் தொடர்பான விவரக்குறிப்புகளைத் தயாரித்து, தொழில்நுட்ப அறிக்கைக ளை வழங்குதல் மற்றும் அதன் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5. உரையாடல்களைப் பதிவிடல் மற்றும் மேலதிக ஒலிப்பதிவு செய்யும் கூடத்தின் நிர்மாணப் பணி நடவடிக்கைகள் கலையக ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6. 2021 ஒக்டோபர் மாதம் 15 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட மரந டுகைத் திட்டத்தின் துவக்கம் சரசவி கலையக வளாகத்தில் இடம்பெற்றன.

7. 2021 திசெம்பர் மாதம் சரசவி கலையகத்தின் அலுவலக பிரிவை பிரித்து வேறாக்குதல், படத்தொகுப்புப் பிரிவு மற்றும் வர்ணக் கலவைப் பிரிவையும் முகமூடி மற்றும் ஒப்பனை பிரிவை நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**கலையகத்தின் வருடாந்த வருமானம்** - 2021

| | | |
|---|---|---|
| ஒலிப் பிரிவு | - | 385425.00 |
| படத்தொகுப்புப் பிரிவு | - | 61475.00 |
| படப்பிடிப்பு | - | 2300204.77 |
| **மொத்தம்** | - | 2747104.77 |

## 13. புலனாய்வு நடவடிக்கைகள்

### 2021 ஆம் ஆண்டில் புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

1. திரையரங்குகளை நிர்மாணிப்பதற்காக காணி கட்டடங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல்.
2. புதிய திரையரங்குகளை திறந்து வைத்தல் மற்றும் மூடப்பட்டுள்ள திரையரங்குகளை மீள திறந்து வைத்தல்.
3. திரையரங்குகளை பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் முறைகேடுகளுக்கு குற்றப்பத்திரங்களை வழங்குதல்.
4. வெளிநாட்டுப் படப்பிடிப்புக்களை மேற்பார்வை செய்தல்.
5. திரையரங்குகளில் நிலையை கண்டறிந்து அனுமதிப் பத்திரங்களை திருத்தியமைப்பதற்காக பரிந்துரை வழங்குதல்.
6. திரையரங்குகளுக்கான மதுபான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக விடுவிப்புச் சான்றிதழ்களை வழங்குதல்.

### 01. திரையரங்குகளை நிர்மாணிப்பதற்காக காணி கட்டடங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல்.

2021 ஆம் ஆண்டினுள் திரையரங்குகளை நிர்மாணிப்பது தொடர்பிலான தகவல்களை சேகரித்தல் மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வரும் திரையரங்குகள்:-

- ✓ அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மற்றும் மாகாண சபைகளுக்கும் திரையரங்குகளை நிர்மாணிப்பது தொடர்பில் தகவல்களை விசாரித்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்காக கிடைக்கப்பெற்ற பதில் கடிதங்களின் படி அவ்விடங்களுகுச் சென்று இடவமைவு ஆய்வு நடத்தப்படவுள்ளது.

**நிர்மாணிக்கப்பட்டடு வரும் திரையரங்குகள்**

- ✓ ஹவ்லோக் சினிமாத் தொகுதி (06 திரையரங்குகள்)

**02. புதிய திரையரங்குகளை திறத்தல் மற்றும் மூடப்பட்டிருந்த திரையரங்குகளை மீள திறத்தல்**

**மூடப்பட்டுள்ள திரையரங்குகளை மீளத் திறத்தல்**

- ✓ நிவ் நன்தா திரையரங்கு – நிகவெரடிய

2021 **ஆம் ஆண்டினுள் திறந்து வைக்கப்பட்ட திரையரங்குகள்**

- ✓ K.C.C சினிமாத் தொகுதி – கண்டி ( 03 திரையரங்குகள்)

03**. திரையரங்குளை பரிசோதனை செய்தல் மற்றும் முறைகேடுகளுக்காக பற்றுக் குறிப்புகளை வழங்குதல்**.

திரையரங்குகளைப் பரிசோதனை செய்வதே புலனாய்வுப் பிரிவின் முக்கிய பணியாகக் காணப்படுகின்றது.

- ✓ 2021 ஆம் ஆண்டில் 760 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**திரையரங்குகளில் இடம்பெறும் முறைகேடுகளுக்கான குற்றப்பத்திரங்களை வழங்குதல்**.

- ✓ புலனாய்வு உத்தியோகத்தர்களினால் திரையரங்குகள் பரீட்சிக்கப்படும் போது பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளன. அதற்காக கூட்டுத்தாபன சுற்றறிக்கையின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டில் ரூபா. 323,700.00 பெறுமதியான பற்றுச்சீட்டுக்கள் 26 வழங்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து 202,500.00 ஆன தொகை அறவிடப்பட்டுள்ளன.

**04. வெளிநாட்டுப் படப்பிடிப்புக்களை மேற்பார்வை செய்தல்**

- ✓ வெளிநாடுகளில் இருந்து இந்நாட்டுக்கு வருகின்ற வர்த்தக விளம்பரங்கள், திரைப்படங்கள் மற்றும் ஆவண நிகழ்ச்சித்திட்டங்களை படப்பிடிப்பு செய்வதனை மேற்பார்வை செய்கின்றது. அதற்கமைய,

- ✓ 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு படப்பிடிப்புக்கள் 11 தடவைகள் இடம்பெற்றதை மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது.

**05. திரையரங்குகளின் நிலைமைகளைக் கண்டறிந்து அனுமதிக் கட்டணத் திருத்தத்திற்கான பரிந்துரைகளை வழங்குதல்**.

- ✓ 09 திரையரங்குகளுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் திருத்தப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

06**. மதுபான அனுமதிக்கு அவசியப்படும் விடுவிப்புப் சான்றிதழ்களை வழங்குதல்**.

- ✓ திரையரங்குகளுக்கான மதுபான அனுமதி உரிமங்களைப் பெறுவதற்காக 2021 ஆம் ஆண்டில் 28 விடுவிப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 14. **திட்டங்கள்**, **புள்ளவிபரங்கள் மற்றும் பயிற்சிகள்**

இப்பிரிவின் முக்கிய பணிகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

- ➢ நிறுவனக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு அவசியப்படும் வழிகாட்டல்களை வழங்குதல்.
- ➢ ஒருங்கிணைந்த திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களைத் தாயரித்தல் மற்றும் முன்னேற்றத்தை மேற்பார்வையிடல்
- ➢ ஆண்டறிக்கையைத் தயாரித்தல்
- ➢ மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்றத்தை நிரல் அமைச்சுக்கள் மற்றும் குறித்த நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.
- ➢ பணியாட்தொகுதியினரின் பயிற்சித் தேவைகளை கண்டறிதல் மற்றும் வருடாந்த பயிற்சித் திட்டங்களை தயாரித்தல்.
- ➢ கூட்டுத்தாபனத்துக்குரிய வர்த்தமானி அறிவித்தல், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய புள்ளிவிபரவியல் தரவுகள் என்பனவற்றை திரட்டி கணனித் தரவுத் தளத்தை பேணிச் செல்லல்.
- ➢

## 15. மருத்துவ உதவித்திட்டம்

அங்கத்துவத் தொகை மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் தொகையின் அடிப்படையில் நடாத்திச் செல்லப்படும் மருத்துவ உதவித் திட்டம் இவ்வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதன் நிர்வாகக் குழு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

- திருமதி. கயனி முணவீர - ப. க. பிரதி பொது முகாமையாளர் - நிதி (குழு தலைவர்)
- திரு. அசங்க குணதிலக - நிர்வாக உத்தியோகத்தர் - நிர்வாகம் மற்றும் மனித வளம் (அ.நி)
- திரு. கே. ஆர். வின்சன்- குழு உறுப்பினர்
- திரு. சுகித இலங்ககோன் - குழு உறுப்பினர்

## 16. நலன்புரிச் சங்கம்

கூட்டுத்தாபனம் கடன் வழங்கல் மற்றும் சிக்கனப்படுத்தல் கூட்டுத்தாபனச் சங்கம் இவ்வாண்டில் செயற்பட்டு வந்தது.

## 17. பௌத்த சங்கம்

கூட்டுத்தாபன ஊழியர்களின் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு தேவைப்படும் புத்தகங்களை வழங்கும் நடவடிக்கை இவ்வருடத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டது.

## 18. விளையாட்டுச் சங்கம்

இவ்வருடத்தில் விளையாட்டுச் சங்கம் செயற்பட்டு வருகின்றது என்பதோடு கொவிட் தொற்று காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடும் அளவு குறைந்து காணப்பட்டது.

## 19. **தொழிற் சங்கங்கள்**

தேசிய ஊழியர் சங்கம், இலங்கை சுதந்திர ஊழியர் சங்கம், திரைப்படக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் மற்றும் வர்த்தக கைத்தொழில் மற்றும் சேவை முற்போக்கு ஊழியர் சங்கம் இவ்வருடத்தினுள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## 20. **நன்றி நவிழல்**

2021 ஆம் ஆண்டில் வெற்றிகரமான அடைவுகளை பெற்றுக்கொள்வதற்காக கூட்டுத்தாபன பணியாட்தொகுதியினரின் பாரிய பொறுப்புடனும் ஊக்கத்துடனும் தங்களது சேவைகளை நிறைவேற்றி வந்துள்ளார்கள்.

அச்சேவைகளை பணிப்பாளர் சபை பெருமனதுடன் பாராட்டுவதோடு அவர்களுக்கு தனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜீ.ஏ. கித்சிரி
பொது முகாமையாளர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

ஒப்பம் – வழக்கறிஞர் தீபால் ஷந்திரரத்ன
தலைவர்
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

# நிதி அறிக்கை
# 2021

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான**
**விரிவான வருமானக் கூற்று**

| விபரம் | குறிப்பு | | 2021 ரூபா' | 2020 ரூபா' |
|---|---|---|---|---|
| **விற்பனை** | 03 | | 18,380,381 | 17,653,672 |
| குறைக்கப்பட்டது - விற்பனைச் செலவு | 04 | | (689,481) | (57,863) |
| மொத்த இலாபம் | | | 17,690,900 | 17,595,809 |
| குறைக்கப்பட்டது - செலவு | | | | |
| பணியாளர்களின் ஊதியம் | 05 | | (89,509,572) | (91,742,352) |
| பிரயாண மற்றும் பிழைப்பூதியக் கொடுப்பனவு | 06 | | (428,361) | (471,632) |
| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 07 | | (5,637,331) | (5,103,699) |
| பழுதுபார்ப்பு, பராமரிப்புகள் மற்றும் தேய்மானம் | 08 | | (25,275,202) | (22,835,028) |
| போக்குவரத்து, இணைப்புகள், கோரிக்கைகள் மற்றும் பிற சேவைகள் | 09 | | (21,555,276) | (22,937,991) |
| அறவிடப்பட முடியாக் கடன்களுக்கான குறைபாடுகளை சரிசெய்தல் | 16-A | | (1,627,943) | (113,490) |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | 20 | | (2,443,174) | (12,457,075) |
| சினிமாக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் நிதிக்கான பங்களிப்புகள் | | | (10,500,000) | (500,000) |
| | | | (156,976,860) | (156,161,265) |
| செயல்பாட்டு இலாபம் / நட்டம் | | | (139,285,960) | (138,565,456) |
| சேர்க்கப்பட்டது : | | | | |
| பிற வருமானம் | 10 | 9,620,540 | | |
| நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்கள் | | 17,388,383 | | |
| பொதுத் திறைசேரியிலிருந்து வருமானத்திற்கான ரசீதுகளை இனங்காணல் | | 11,757,590 | | |
| 224 கட்டிடங்களின் வாடகை | | 9,937,000 | | |
| | | | 48,703,513 | 49,704,892 |
| ஆண்டின் இலாபம் / நட்டம் | | | (90,582,447) | (88,860,564) |
| சேர்க்கப்பட்டது : பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற ரசீதுகள் | | | 100,000,000 | 90,000,000 |
| வரிக்கு முன்னைய இலாபம் | | | 9,417,553 | 1,139,436 |
| குறைக்கப்பட்டது - வரிகளுக்கான ஒதுக்கீடு | | | | |
| பற்றாக்குறை / மிகை | | | 9,417,553 | 1,139,436 |

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதிக்கான
## நிதி நிலை அறிக்கை

| | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| **பிரதிநிதித்துவம் வகிப்பது** | | ரூபா' | ரூபா' |
| **நிலையான சொத்துக்கள்** | | | |
| சொத்து" இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | 11 | 341,996,821 | 335,219,247 |
| புலனாகாத சொத்துக்கள் | 11A | 1,691,620 | - |
| நீண்ட கால முதலீடு | 12 | 196,022,798 | 26,737,169 |
| ஊழியர் கடன் | 16-1 | 16,506,775 | - |
| | | 556,218,013 | 361,956,416 |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| குறுகிய கால முதலீடுகள் | 13 | 106,850,577 | 201,875,032 |
| பங்குகள் | 14 | 7,535,416 | 7,084,395 |
| கடனாளிகள் | 15 | 118,441,907 | 111,409,083 |
| இதர கடனாளிகள் | 16 | 191,404,901 | 188,916,063 |
| முன்கூட்டியே வைப்பு மற்றும் பணம் செலுத்து | 17 | 3,359,152 | 3,418,948 |
| பணம் மற்றும் வங்கி இருப்பு | 18 | 57,523,462 | 144,745,749 |
| | | 485,115,415 | 657,449,270 |
| மொத்த சொத்துக்கள் | | 1,041,333,428 | 1,019,405,686 |
| **பயன்படுத்தப்பட்ட மூலதனம்** | | | |
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | | 10,000,000 | 10,000,000 |
| திரட்டப்பட்ட இலாபம் | | 441,170,247 | 424,483,286 |
| மற்ற இருப்புக்கள் | | 134,282,759 | 134,282,759 |
| | | 585,453,006 | 568,766,045 |
| **நடப்பற்ற பொறுப்புகள்** | | | |
| மானியங்கள் | 19 | 89,894,345 | 90,667,934 |
| பணிக்கொடையிலிருந்து ஒதுக்கீடுகள் | 20-1 | 48,057,987 | 51,335,633 |
| | | 137,952,331 | 142,003,567 |
| **சேர்க்கப்பட்டது - தற்போதைய பொறுப்புகள்** | | | |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 20-2 | 944,610 | - |
| வைப்புக்கள் | 21 | 3,039,499 | 2,949,499 |
| திரைப்பட வாடகை கடன்வழங்குநர்கள் | 22 | 244,990,974 | 233,842,034 |
| நிதிப் பொறுப்புகள் | 23 | 53,565,690 | 51,097,862 |
| பிற கடன்வழங்குநர்கள் | 24 | 12,000,501 | 15,430,814 |
| செலுத்தப்பட வேண்டிய வரித்தொகை | 24 | 190,865 | 190,865 |
| நிதி ஏற்பாடுகளை ஒதுக்கல் | 24 | - | 5,125,000 |
| | | 314,732,139 | 308,636,074 |
| மொத்த பொறுப்புகள் | | 1,038,137,477 | 1,019,405,686 |

பக்க இலக்கம் 05 முதல் 24 வரையிலான கணக்கியல் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 25 முதல் 39 வரையிலான கணக்குகளுக்கான குறிப்புகள் நிதிநிலை அறிக்கையின் இன்றியமையாத பகுதியாகும். நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான பொறுப்பை பணிப்பார் சபை கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் சார்பில், இந்த நிதிநிலை அறிக்கைகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டதற்கு பின்வரும் கைகொப்பங்கள் இடப்பட்டுள்ளன.

| ………………….. | …………………… | ………………… |
|---|---|---|
| தினில் ஹெய்யன்துடுவ | பி.எம். தீபால் சந்திரரத்ன | |
| ப.க. பிரதி பொது முகாமையாளர் - நிதி | தலைவர் | பணிப்பாளர் |

2022.09.23

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
303, பௌத்தாலோக மாவத்தை
கொழும்பு 07

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
## பங்கு மாற்றத்திற்கான அறிக்கை

| | சமபங்கு மூலதனம் ரூபா. | திரட்டப்பட்ட இலாபம் ரூபா. | மூலதன இருப்புக்கள் ரூபா. | மறுமதிப்பீட்டு இருப்புக்கள் ரூபா. | பிற இருப்புக்கள் ரூபா. | மொத்தம் ரூபா' |
|---|---|---|---|---|---|---|
| **2020.01.01 இற்கான நிலுவை** | 10,000,000 | 423,343,850 | 499,898 | 125,953,399 | 7,829,462 | 567,626,609 |
| ஆண்டின் இலாபம் | - | 1,139,436 | - | - | - | 1,139,436 |
| கடந்த ஆண்டிற்கான சரிசெய்தல் (குறிப்பு 2'15) | | 7,269,407 | | | | 7,269,407 |
| **2020.12.31 ஆந் திகதிக்கு நிலுவை** | 10,000,000 | 431,752,693 | 499,898 | 125,953,399 | 7,829,462 | 576,035,453 |
| | | | | | | - |
| ஆண்டின் இலாபம் | - | 9,417,553 | - | - | - | 9,417,553 |
| **2021.12.31 ஆந் திகதிக்கு நிலுவை** | **10,000,000** | **441,170,247** | **499,898** | **125,953,399** | **7,829,462** | **585,453,006** |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
## காசுப் பாய்ச்சல் அறிக்கை

| | | 2021 | 2020 |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட பணம்** | | ரூபா' | ரூபா' |
| வரி விலக்குக்கு முன் தேறிய இலாபம் (குறைவான) | | (90,582,447) | (88,860,564) |
| உற்பத்தி கடன்கள் மீதான வட்டி | | - | - |
| நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | | (17,388,383) | (20,402,037) |
| | | (107,970,829) | (109,262,601) |
| **நிதிப் பிரழ்வு தொடர்பாக தாக்கம் செலுத்தாத விடயங்களுக்கான சீராக்கங்கள்** | | | |
| தேய்மானங்கள் | | 18,510,514 | 17,179,605 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | | 667,863 | 12,457,075 |
| அரசின் மானியங்கள் வருமானமாக இனங்காணல் | | (11,757,590) | (11,492,198) |
| | | (100,550,042) | (91,118,119) |
| **முன்னைய காலகட்டங்களின் விடயங்கள்** | | | |
| முன்னைய காலகட்டங்களின் விடயங்களை சரிசெய்தல் | | 9,919,744 | 3,603,107 |
| முன்னைய காலகட்டங்களின் விடயங்களை சரிசெய்தல் | | 7,269,407 | 7,674,309 |
| செயற்பாட்டு மூலதன விடயங்களில் மாற்றங்களைச் செய்வதற்கு முன் செயற்பாடுகளிலிருந்து இலாபம் | | (83,360,891) | (79,840,703) |
| **செயற்பாட்டு மூலதன விடங்களில் மாற்றங்கள்** | | | |
| பங்குகள் ( அதிகரிப்பு) | | (451,020) | (780,839) |
| கடனாளிகள் ( அதிகரிப்பு) | | (7,032,825) | 5,678,439 |
| வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும் ^ அதிகரிப்பு & | | (18,935,816) | 650,041 |
| வைப்புக்கள் மீதான பொறுப்பு ^ குறைதல்& | | 90,000 | (307,027) |
| கடன் வழங்குநர்கள் ( அதிகரிப்பு) | | 11,148,940 | (17,304,769) |
| மற்ற கடன் வழங்குநர்கள்( குறைவு) | | (6,087,484) | 6,982,916 |
| | | (104,629,096) | (84,921,941) |
| **குறைவாக -** | | | |
| பணிக்கொடை  செலுத்துதல் | | (3,000,900) | (3,486,995) |
| | | (107,629,996) | (88,408,936) |
| **முதலீட்டு நடவடிக்கைகளால் பெற்ற காசுப் பாய்ச்சல்** | | | |
| உற்பத்திக் கடன்களுக்கான வட்டி | | - | - |
| நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | | 17,388,383 | 20,402,037 |
| நிலையான சொத்துக்களை கையகப்படுத்தல் | | (36,899,452) | (25,998,090) |
| திறைசேரி உண்டியல்களும் நிலையான வைப்புக்களில் முதலீடும் | | (74,261,174) | 110,209,135 |
| | | (201,402,240) | 16,204,147 |
| **நிதிச் செயற்பாடுகளில் பெற்ற காசுப் பாய்ச்சல்** | | | |
| திறைசேரிக் கிடைப்பனவுகள் | | 110,984,000 | 105,000,000 |
| நிதி மற்றும் நிதிக்குச் சமனான விடயங்களின் தேறிய அதிகரிப்பு (குறைவு) | | (90,418,240) | 121,204,146.74 |
| ஆண்டின் தொடக்கத்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமனான விடயங்களின் இருப்பு | | 144,745,749 | 23,541,601 |
| 03 மாதங்களில் பூர்த்தியாகும் ரிபோ / திறைசேரி உண்டியல்கள் | 26,003,911 | | |
| ஆண்டின் இறுதியில்  நிதி மற்றும் நிதிக்குச் சமனான விடயங்களின் இருப்பு | 31,519,551 | | |
| | | 57,523,462 | 144,745,748.94 |

## நிதி அறிக்கையிடல் சம்பந்தமான முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று

கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம்,

1. கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய அனைத்து நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான உரிய கணக்குப் புத்தகங்களை வைத்திருப்பது தொடர்பாக,

2. கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் நிதி நிலைப்பாடுகள் தொடர்பான உண்மையான மற்றும் நியாயமான முன்வைப்பிற்காக வேண்டி, 1995 இலக்கம் 15 இனைக் கொண்ட இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரச் சட்டத்தின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரங்களிற்கு இணங்க கணக்குகளைத் தயாரித்தல் தொடர்பாக மற்றும்

3. கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவும் ஊழல் மற்றும் மோசடிகளை தவிர்ப்பதற்காகவும் வேண்டி உசிதமான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டியுள்ளது.

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

நிதி அறிக்கைக்கான குறிப்புகள்

2021 **திசெம்பர் மாதம்** 31 **ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கானது**

---

## 1. **பொதுவான தகவல்கள்**

### 1.1.1 **அமைவிடமும், சட்டவியல் நிலைப்பாடும்**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் 1971 இலக்கம் 47 இனைக் கொண்ட சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டுத்தாபனமாக நிறுவப்பட்டது. இதனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம், கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இலக்கம் 303 இனைக் கொண்ட இடத்தில் அமையப் பெற்றுள்ளது.

### 1.1.2 **அடிப்படைச் செயற்பாடுகளும், செயற்பாட்டு இயல்புகளும்**

இலங்கைச் சினிமாவின் உள்நாட்டு அடையாளத்தை சர்வதேச மட்டத்தில் அடையாளப்படுத்தக்கூடிய தரமான திரைப்படக் கலாச்சாரத்தை உருவாக்குவதில் முன்னோடியாக திகழல்.

### 1.1.3 **வெளியீட்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட திகதி**

இந்த நிதி நிலை அறிக்கைகளை பகிர்ந்தளிப்பதற்காக பணிப்பாளர் சபையினால் 2022.12.23 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 **கணக்குகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை**

### 1.2.1 **இணக்கப்பாடு தொடர்பான அறிக்கை**

கூட்டுத்தாபனத்தின் நிதி நிலை அறிக்கை, விரிவான வருமானம், உரிமை மாற்ற அறிக்கை, முக்கிய கணக்கியல் கொள்கை சுருக்கக் குறிப்புகள் ( நிதி அறிக்கைகள்) சர்வதேச கணக்கியல் தரநிலை சபையினால் சர்வதேச நிதி அறிக்கை தரநிலை (IFRS) பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கியல் தரங்களுடன் (SLFRS) இணங்கியதாகும்.

### 1.2.2 **நிதி அறிக்கைகளுக்கான பொறுப்பு**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் நிதிநிலை அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளது.

1.2.3 **கணக்கியல் அடிப்படை**

தொடர்புடைய குறிப்புகளின் கீழ் நியாயமான பெறுமதி குறித்து உரிய வெளிப்பாடுகள் செய்யப்படாவிட்டால், நிதிநிலை அறிக்கைகள் வரலாற்றுச் செலவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

1.2.4 **தொடர்ச்சி நிலை**

நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது முகாமைத்துவத்தினால் கூட்டுத்தாபனத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கான இயலுமையை மதிப்பீடு செய்துள்ளது. கூட்டுத்தாபனம், அதன் செயற்பாடுகளை எதிர்காலத்தில் பேணிச் செல்வதற்கு அவசியப்படும் போதுமான வளங்கள் காணப்படுவதாக நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றது. இருக்கின்ற சகல தகவல்களையும் கவனத்திற் கொண்டு எதிர்வரும் காலங்களில் கூட்டுத்தாபனத்தை மூடுவதற்கோ அல்லது அதன் செயற்பாடுகளை நிறுவத்துவதற்கோ காரணங்கள் காணப்படாததினால், தொடர்ச்சியாக செயற்படுகின்ற நிறுவனமாகக் கருதி நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

1.2.5 **செயற்படுதல் மற்றும் முன்வைத்தலுக்கான புழக்கத்தில் உள்ள நிதி**

கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுப் புழக்கத்தில் உள்ள நிதியாகக் காணப்படும் இலங்கை ரூபாவினால் இந்த நிதிக் கூற்று முன்வைக்கப்பட்டுள்ளது.

1.2.6 **முக்கியத்துவம் பெறுகின்ற கணக்கியல் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அட்டவணைகள்**

அறிக்கையிடப்படுகின்ற தினத்தில் அறிக்கையிடப்பட்ட வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் கடன் பொறுப்புக்கள் மற்றும் சாத்தியமற்ற பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் தொடர்பான அறிக்கைப்படுத்தப்பட்ட எண்ணிக்கைகளில் தாக்கம் செலுத்துகின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களைப் பெறுவதற்கு நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது முகாமைத்துவத்திற்குத் தேவைப்படுகின்றது. எவ்வாறாயினும், இந்த அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளில் காணப்படுகின்ற உறுதியற்ற தன்மை காரணமாக எதிர்காலத்தில் சொத்துக்கள் மற்றும் கடன் பொறுப்புக்களில் நிலவுகின்ற பெறுமதியில் அவதானிக்கத் தக்க சீராக்கங்களை மேற்கொள்வதற்குத் தேவையான செல்வாக்கினைச் செலுத்த முடியும். இவ்வாறான விடயங்களின் போது தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் உள்ளடக்கப்பட முடியும்.

**<u>மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்</u>**

எதிர்வரும் நிதியாண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் நிலவுகின்ற பெறுமதியில் அவதானிக்கக்கூடிய சீராக்கங்களை மேற்கொள்வதற்குரிய சந்தர்ப்பம் ஏற்படுமிடத்து, முக்கிய அவதானங்கள் ஏற்பட முடியுமான, அறிக்கையிடப்படுகின்ற திகதியில் நிலவுகின்ற எதிர்காலம் தொடர்பான முக்கிய அனுமானங்கள் மற்றும் மதிப்பீட்டு மூலாதாரங்கள் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>(அ) நிதி நியமப் படிவங்களின் நியாயமான பெறுமதிகள்</u>**

இருப்பு நிலைப்பத்திரத்தில் அறிக்கையிடப்படுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகளின் நியாயமான பெறுமதி செயற்பாட்டுச் சந்தையில் தோன்ற முடியாததுடன், அவை தள்ளுபடியான நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் / அல்லது கணிதவியல் மாதிரிப் படிவங்கள் அடங்கலான மூலோபாயத் திட்டங்களைப் பிரயோகித்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாதிரிப் படிவத்தின் உள்ளீடுகள், முடியுமான சந்தர்ப்பங்களில் ஆய்வு செய்யக் கூடிய வர்த்தக சந்தைத் தரவுகள் அவ்வாறான விடயங்கள் இல்லாத விடத்து தீர்ப்புகளை வழங்குகின்ற போதே பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறான நியதிகள் தொடர்பான அனுமானங்களில் மாற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ள நிதி நியமப் பத்திரங்களில் நியாயமான பெறுமதியின் பால் தாக்கம் செலுத்த முடியும்.

**<u>(ஆ) நியாயமான பெறுமதி</u>**

நியாயமான பெறுமதி என்பது அறிவு மற்றும் விருப்பத்தினைக் கொண்ட சாரார்களிடையே கைக்கெட்டிய தூரத்தில் நிகழ்கின்ற கொடுக்கல் வாங்கல்களின் போது சொத்தொன்றினை பரிமாற்ற முடியுமான பெறுமதியாகும். நிதி நியமப் படிவமொன்றினை ஆரம்பத்தில் அடையாளம் காண்பது அதன் நியாயமான பெறுமதியை பொதுவாக கணக்கிடப்படுவதன் மூலம் கிடைக்கப் பெற்ற அல்லது செலுத்திய பெறுமதியாகும். பிற்பட்ட காலங்களில் நிதிச் சொத்தின் நியாயமான பெறுமதியாக அமைவது முனைப்பினைக் கொண்ட வர்த்தக சந்தையில் கோரப்படுகின்ற கேள்வி கோரல் விலையாகும். அதாவது நிதிப் பொறுப்புக்கள் மீது கோருகின்ற விலையாகும். நிதி மற்றும் அதனுடன் ஒத்துப்போகும் விடயங்கள் மற்றும் குறுகிய கால முதலீட்டுக்காக நிலவும் பெறுதியாக அமைவது நியாயமான விலையாகும்.

## 2. **விசேட கணக்கியல் கொள்கை**

### 2.1 **சொத்துக்கள் மற்றும் அவற்றினை மதிப்பீடு செய்யும் அடிப்படை**

நிதி நிலைக் கூற்றுக்களில் நடப்புச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிதி மற்றும் வங்கி நிலுவைகள் மற்றும் பொதுவான செயற்பாட்டுச் சுழற்சியினுள் அல்லது ஒரு வருடத்தினுள் அல்லது ஆகிய இரண்டில் குறைந்த காலப்பகுதியில் நிதியாக கணிசமான அளவில் உட்படுத்தப்பட்ட அளவாகும்.

### 2.2 **நிதி நியமப் பத்திரம்**

#### 2.2.1 **நிதிச் சொத்துக்கள் (தோற்றம் பெறாத)**

நிதிச் சொத்துக்கள் பின்வரும் வகையில் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றது. இலாபம் மற்றும் நட்டங்கள் மூலம் நியாயமான பெறுமதிக்கு மதிப்பை சேர்க்கின்ற விடயங்கள், கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய விடயங்கள், காலம் பூர்த்தியாகும் வரை அல்லது விற்பனை செய்வதற்குள்ள விடயங்கள், இவ்வாறான வகைப்படுத்தல்களை முகாமைத்துவத்தினால் நிர்ணயம் செய்யப்படுவது அடிப்படையை இனங்காணல் மற்றும் அந்த முதலீட்டினை கையகப்படுத்துவதற்கான நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டேயாகும்.

#### 2.2.2 **வகைப்படுத்தல், இனங்காணல் மற்றும் அளவிடுதல்.**

முகாமைத்துவத்தினால் அதனது நிதிச் சொத்துக்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்படுகின்றது.

அ. கடன் மற்றும் கிடைக்கப் பெற வேண்டியவை

ஆ. விற்பனைக்குள்ள விடயங்கள்

**அ. கடன் மற்றும் கிடைக்கப் பெற வேண்டியவை**

நிலையான அல்லது செயலூக்கமான வர்த்தக சந்தை விலைகள் அறிக்கையிடப்படாத, தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளுடனான நிதிச் சொத்துக்களாகும். இந்தச் சொத்துக்கள் முதலில் நியாயமான பெறுமதிக்கு ஒன்று சேர்க்கப்பட்டு நேரடியாக தொடர்புபடும் கொடுக்கல் வாங்கல் செலவினை கண்டறிந்து கொள்கின்றது. பிற்காலத்தில் கடன் மற்றும் கிடைக்கப் பெற வேண்டியவைகள் பயனுள்ள வட்டி முறையின் கீழ் கடன்தீர் நிதி மூலமாகக் கடனினைக் குறைத்தலும், ஏதேனும் சேதங்கள் ஏற்பட்டு நட்டமொன்று ஏற்படுமாயின் அதனையும் கருத்திற் கொண்டு அளவிடப்படுகின்றது.

**ஆ. விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்கள்**

விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் என்பது குறித்துரைக்கப்படாத காலப் பகுதியொன்றில் வைத்துக் கொள்வதற்கு என்னுகின்ற, பணப்புழக்கம் காரணமாக அல்லது வட்டி விகிதாசாரம் மாற்றமுறுவதன் அடிப்படையில், நாணய மாற்று விகிதாசாரம் மாற்றமுறுவதன் அடிப்படையில் அல்லது திணிவுகளின் விலை அடிப்படையில் விற்பனை செய்வதற்குத் தேவையாகக் காணப்படும் அல்லது கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய விடயங்களாக வகைப்படுத்தப்படாத காலம்பூர்த்தியாகும் வரை வைத்திருக்கக் கூடிய அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் அடிப்படையில் நியாயமான பெறுமதியைக் கொண்ட நிதிச் சொத்தாகும்.

<u>2.2.3 **நியாயமான பெறுமதியை உறுதிப்படுத்தல்**.</u>

கடன் மற்றும் முற்பணத்தினைப் போன்றே பொறுப்புக்களின் நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்படுகின்ற போது நிகழ்கால பெறுமதி மாதிரிகளுக்கு இணங்கியதாக காசுப் பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டு கடன் அம்சங்கள், பணப்புழக்கத் தன்மை மற்றும் செலவுகளையும் கருத்திற் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. சந்தையின் மூலம் கிடைக்கப் பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய பொருட்களின் கிட்டிய நியாய பெறுமதிகளாக கருத்திற் கொள்வது நிலவுகின்ற பெறுமதிகளில் சேதங்களுக்காக வேண்டி கழிக்கப்பட்டதன் பின்னரான மீதியாகும்.

<u>2.2.4 **மீள் வகைப்படுத்தல்**</u>

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் தவிர்ந்த நிதிச் சொத்துக்கள், வர்த்தகத்திற்கான பொருட்கள் என்றவாறு பிரித்து வகைப்படுத்துவது மிகவும் அரிதான சூழலில் அமைந்த ஒரு தனித்துவம் வாய்ந்த்தொரு நிகழ்வாக அனுமதிக்கப்படுகின்றன. கடன் மற்றும் கிடைக்கப் பெற வேண்டிய விடயங்களுள் விற்பனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களாக மீள்வகைப்படுத்தல் செய்வது கூட்டுத்தாபனத்தினால் கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய விடயங்களாக வரைவிலக்கணப்படுத்த உரியதாக்கிக் கொள்ள முடியுமாயின் மீள்வகைப்படுத்தலினை தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படுகின்றது. மீள் வகைப்படுத்தலினை மேற்கொள்வது எவ்வாறெனில், அவ்வாறு செய்யப்படுகின்ற திகதிக்கு உள்ள நியாயமான பெறுமதிக்காகும். நியாயமான பெறுமதியாக அமைவது புதிய செலவுகள் அல்லது கடன்தீர் நிதி மூலமாகக் கடன் குறைத்தல் செலவினதும் அடிப்படையிலாகும்.

## 2.2.5 **சேதங்கள்**

**(அ) கடன்தீர் நிதி மூலமாகக் கடன் குறைத்தல் செலவுகளை நடாத்திச் செல்வதற்குரிய நிதிச் சொத்துக்கள்**

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும் நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்து வகுதியொன்றின் பெறுமதி குறைந்துள்ளதாகக் காட்டும் சான்றுகளை கூட்டுத்தாபனத்தினால் கணக்கிடப்படுகின்றது. சொத்துக்களின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஏற்பட்ட ஒரு சந்தர்ப்பம் அல்லது பல சந்தர்ப்பங்களின் பிரதிபலனாக (ஏற்றுக் கொள்ளப்பட்ட நட்டமடைந்த சந்தர்ப்பங்கள்) பெறுமதியில் குறைவு ஏற்படல் போன்ற நோக்கங்களைக் கொண்ட ஆதாரங்கள் காணப்படுமாயின் மற்றும் அந் நட்டமடைந்த சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அல்லது நம்பிக்கைத் தன்மையுடன் கூடிய வகையில் மதிப்பீடு செய்ய முடிந்த நிதிச் சொத்து வகுதியொன்றின் அடிப்படையில் செல்வாக்குக் காணப்படுமாயின் மாத்திரமே நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்து வகுதியொன்றின் பெறுமதியில் குறைவு ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. பெறுமானம் குறைகின்றது போன்ற சான்றுகள் காணப்படுமாயின், கடனாளியொருவர் அல்லது கடனாளி வகுதியொன்றில் அவதானிக்கக் கூடிய வகையில் நிதி நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதாகக் காட்டுதல், வட்டியில் அல்லது மூலதனக் கொடுப்பனவுகளில் கவனயீனமாக இருத்தல், அவர்கள் கடன் தீர்க்க வகையற்ற நிலைக்கு அல்லது நிதிச் சீர்திருத்தங்களுக்கு உற்படும் நிலைக்கு மற்றும் கவனயீனமாக விட்டு விடலுடன் தொடர்புடைய பொருளாதார நிலைமைகள் அல்லது நிலுவைத் தொகைகளில் மாற்றங்கள் ஏற்படல் போன்ற மதிப்பீடுகள் எதிர்கால நிதிப் பாய்ச்சல்களை மதிப்பிட முடியுமான குறைவொன்றினை அவதானிக்கக் கூடிய தரவுகளை எடுத்துக் காட்டல், என்பனவற்றினை உள்ளடக்க முடியுமாக இருக்கின்றது.

கடன் தீர் நிதி மூலமாகக் கடன் குறைத்தல் செலவிற்கு கொண்டு வரப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கான, வெவ்வேறாக முக்கியத்துவம் பெறும் நிதிச் சொத்துக்காளுக்காக வேண்டி தனித் தனியாக பெறுமானங்கள் குறைகின்றது என்ற நோக்கில் ஆதாரங்கள் காணப்படுகின்றதா என கூட்டுத்தாபனத்தினால் முதலாவது தனித்தானியாக மதிப்பிடப்படுவதோடு, தனித் தனியாக முக்கியத்துவம் பெறாத நிதிச் சொத்துக்களுக்களை கூட்டாக கணக்கிடப்படுகின்றது. முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் தனித்தனியாக கணிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கான பெறுமதி குறைவது தொடர்பானநோக்கத்தையுடைய சான்றுகள் இல்லையென ஒட்டுமொத்தமாக தீர்மானிக்கப்பட்டால் அவை, அந்தச் சொத்துக்களுக்குச் சமனான வரவினையுடைய அவதான குணவியல்புகள் கொண்ட சொத்து வகுதியில் உள்ளடக்கப்படுவதுடன், அவற்றின் பெறுமதி குறைவதனால் ஒட்டுமொத்தமாக கணக்கிடப்படும். பெறுமதியைக் குறைப்பதற்காகதனித் தனியாக கணிப்பிடப்பட்ட மற்றும் பெறுமதி குறைதலுடன் கூடிய அல்லது தொடர்ச்சியாக இனங்கண்டு

கொள்வதற்கு உரிய சொத்துக்களின்பெறுமதி குறைகின்ற போது திரட்டிய கணக்கிடலுக்கு உட்படுத்தப்படுவதில்லை.

கடன்தீர் நிதி மூலமாகக் கடன் குறைத்தல் செலவுக்கு கொண்டு வரப்பட்ட சொத்துக்களின் அடிப்படையில் பெறுமதி குறைவடைந்து நட்டங்களை பொறுப்பேற்றுள்ளதாக நோக்கத்தையுடைய சான்றுகள் காணப்படுமிடத்து, சொத்துக்களில் நிலவும் பெறுமதி மற்றும் நிதிச் சொத்துக்களில் முதல் உற்பத்தித்திறனின் வட்டி விகிதாசாரத்திற்கு தரப்படுத்தப்பட்ட எதிர்கால நிதிப் பாய்ச்சலுக்கும் நிகழ்காலப் பெறுமதிக்கு (ஏற்கப்படாத எதிர்பார்க்கப்படாத எதிர்கால கடன் நட்டங்கள் அல்லாத) இடையேயான வேறுபாட்டினால் நட்டத்தின் அளவுகள் கணிப்பிடப்படும். கடனிற்காக மாற்றமடைகின்ற வட்டி விகிதாசாரமொன்று நிலவுமானால், குறிப்பிடத்தக்கதொரு பெறுமதி குறைவடைகின்ற நட்டங்களை கணிப்பிடுவதற்காக தள்ளுபடி செய்யப்பட்ட விகிதாசாரமானது நிகழ்கால உற்பத்தித்திறன் மிக்க வட்டி வீதமாகும். சொத்துக்களில் நிலவுகின்ற பெறுமதிகள் கொடுப்பனவுக் கணக்கொன்றினைப் பிரயோகிப்பதனூடாக குறைவதுடன், சேதமடைகின்ற அளவுகள் வருமானக் கூற்றில் கண்டறியப்பட்டுள்ளது. வட்டி வருமானம் குறைந்துள்ள பெறுமதி அடிப்படையில் திரட்டப்பட்டவைகளை பேணிச் செல்லப்படுவதுடன், அந்த பெறுமதி குறைகின்ற நட்டத்தினை மதிப்பீடு செய்கின்ற பணிக்காக வேண்டி எதிர்கால நிதிப் பாய்ச்சலினை தள்ளுபடி செய்யப்பட்ட வட்டி வீதாசாரத்தில் பிரயோகித்து ஒன்றுசேர்க்கப்படுகின்றது. வருமானக் கூற்றுக்களில் முதலீட்டு வருமானங்களின் ஒரு பகுதியாகக் கொண்டு வட்டி வருமானம் அறிக்கைப்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் அறவிட்டுக் கொள்கின்ற போது உண்மையான எதிர்பார்ப்புக்கள் இல்லாத போது அதனுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளுடன் கடன் வெட்டி நீக்கப்படுவதுடன், சகல காப்பீட்டு குழுமத்திற்கும் கணிசமான அளவு அல்லது கையகப்படுத்தப்பட்டுள்ளது. கிட்டிய வருடத்தில் பெறுமதி குறைந்து செல்வதனை இனங்கண்டதன் பின்னர் ஏதேனும் ஒருகாரணத்தினால் மதிப்பிடப்பட்ட பெறுமதி குறைந்து நட்டம் அதிகரிக்குமாயின் அல்லது குறைவடையுமானால் கொடுப்பனவின் அளவினையும் சரிகட்டி முன்னர் இணங்காணப்பட்ட பெறுமதி குறைவடையும் நட்டம் அதிகரித்தல் அல்லது குறைவடையச் செய்யும். எதிர்கால நீக்கல்களின் (குறைப்புக்கள்) பின்னர் அறவிட்டுக் கொண்டால் அவ்வறவீடானது வருமானக் கூற்றில் கொடுப்பனவு (Allowance) கணக்கில் சீராக்கம் செய்யப்படும்.

**(ஆ) பிற நிதியியல் அல்லாத சொத்துக்களின் சேதங்கள்**

சொத்தொன்றில் நிலவும் பெறுமதியை அறவிட்டுக் கொள்ள முடியாதெனக் காணும் சந்தர்ப்பங்களில் சேதங்களை கவனத்தில் கொள்ள வேண்டி ஏற்படும். நிலவுகின்ற பெறுமதி அதன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அறவிட்டுக் கொள்ள முடியுமான பெறுமதியை மீறிச் செல்லுமாயின் பெறுமதி குறைவடையும் நட்டத்தினை அறிந்து கொள்ள முடியும். சொத்தொன்றில் அறவிடப்பட முடியுமான பெறுமதியாக அமைவது அங்கு பயன்படுத்தப்படுகின்ற பெறுமதி மற்றும் அதன் சாதாரண பெறுமதியிலிருந்து விற்பனைச் செலவினைக்

குறைக்கின்ற போது கிடைக்கின்ற பெறுமதி போன்ற அவற்றின் உயர்பெறுமதிகளாகும்.

2.2.6 **இனங்காணலை கைவிடல்**.

நிதிச் சொத்தொன்றின் (அல்லது பகுதி அல்லது குழுமத்தின் பகுதி உள்ளடங்களாக) என அடையாளங் காணல் கைவிடப்படும் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அமைகின்றது.

- நிதிப் பாய்ச்சல்கள் கிடைக்கின்ற உரிமை காலாவதியாதல்
- கூட்டுத்தாபனத்தினால் சொத்து மூலம் நிதிப் பாய்ச்சல்கள் கிடைக்கின்ற உரிமைகளை பொறுப்பளித்தல் அல்லது கிடைக்கப் பெற்ற நிதிப்பாய்ச்சல்களை மூன்றாம் தரப்பினருக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என அனுமானித்தல்.

(அ) கூட்டுத்தாபனத்தினால் சகல நலன்களையும் ஆபத்துக்களையும் ஒப்படைத்தல்.

(அ) கூட்டுத்தாபனத்தினால் சகல நலன்கள் மற்றும் ஆபத்துக்களை ஒப்படைத்தல் அல்லது தக்க வைத்துக் கொள்ளாமல் நிர்வாகப் பொறுப்பினை ஒப்படைத்தல்.

2.2.7 சட்ட ரீதியான உரிமையொன்று காணப்படும் சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஒருங்கிணைத்து தேறிய பெறுமதியைக் காட்டியுள்ளது.

2.2.8 **பங்கு முதலீடு**

வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்தித்தாள் நிறுவனம் ரூபா. 6.35 வீதம் பங்குகளை 20,000 இற்கு முதலீடு செய்துள்ளது.

<u>2.3 **சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்**</u>

<u>2.3.1 **இனங்காணலும் அளவீடும்**.</u>

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணப் பொருட்கள் அவற்றின் ஒட்டுமொத்த தேய்மானங்கள் மற்றும் சேதங்களுக்கான நட்டங்களைக் குறைத்ததன் பின்னர் செலவில் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதியில் காட்டப்பட்டுள்ளது. செலவினுள் சொத்துக்களை கையகப்படுத்திக் கொள்ளும் போது ஏற்கப்பட்ட செலவுகளில் நேரடியாக உரித்துடையதாகும் செலவுகளில் உள்ளடக்கப்படும். சுயமாக உருவாக்கப்படும் சொத்துக்களில் அந்தச் சொத்துக்கள் பயன்பாட்டு நிலைக்குக் கொண்டு வருவதற்காக ஏற்கப்பட்ட பொருட் செலவுகள், நேரடி உழைப்புக்கள், நேரடியாக தாக்கம் செலுத்துகின்ற ஏனைய அதற்குரியதான செலவுகளும் உள்ளடக்கப்படும். பழுதுபார்ப்புக்காக ஏற்படும்

செலவுகள் மற்றும் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார நன்மைகள் அவை ஏற்படும் நேரத்தில் ஏற்படும் செலவுகளாக அடையாளம் காணப்படுகின்றன.

<u>2.3.2 **பிற்காலச் செலவுகள்**</u>

உபகரணங்களை மாற்றுவதற்கான செலவுகள் தனித்தனியாக மூலதனமாக்கப்படுகின்றன. அதாவது விரிவான சோதனை மற்றும் முழு பழுதுபார்க்கும் செலவுகள் அவற்றின் வருமானம் சிக்கனமானதாக இருந்தால் மற்றும் அந்த நன்மைகளை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும். தினசரி சேவைகள் செய்யப்படும் போது வருமான அறிக்கையில் அடையாளம் காணப்படுகின்றன.

<u>2.3.3 **தேய்மானம்**</u>

தேய்மானத்திற்கான ஒதுக்கீடு எளிய முறையில் செலவு / மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. நிலத்தைத் தவிர பிற சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பின்வரும் சதவீதத்துக்கு ஏற்ப பயன்பாட்டு ஆயுள்காலத்தில் தேய்மானம் கணக்கிடப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| கட்டிடம் | - | தலைமை அலுவலகம் | 2.5% |
| | - | கேட்போர்கூடம் | 5% |
| திரைப்படக் கட்டிடத் தொகுதி | - கட்டிடம் | | 5% |
| | - | ஏனைய இயந்திர சாதனங்கள் | 10% |
| | | தளபாடங்களைப் பொருத்துதல் | 10% |
| | | மோட்டார் வாகனங்கள் | 25% |
| | | திரைப்படக் காப்பகம் | 10% |
| | | கலாச்சார / கல்வி / திரைப்பட உபகரணங்கள் | 10% |
| | | திரைப்பட உபகரணங்கள் | 10% |
| | | நலன்புரி உபகரணங்கள் | 10% |

சொத்து, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்த தினத்தில் இருந்து இருப்புக்கள் கணக்கிடப்பட ஆரம்பிக்கப்படும்.

<u>2.3.4 **இனங்காணலை நீக்குதல்**</u>

சொத்துக்கள், இயந்திரத் தொகுதிகள் மற்றும் உபகரணப் பொருட்களில் நிலவுகின்ற பெறுமதிகளை அகற்றுகின்ற போது அல்லது அவற்றிலிருந்து எதிர்கால நலன்களை எதிர்பார்க்காத போது இனங்காணல் நிறுத்தப்படும்.

சொத்துக்கள், இயந்திரத் தொகுதிகள் மற்றும் உபகரணப் பொருட்களை இனங்காணாமல் இருப்பதால் ஏற்படுகின்ற இலாபங்கள் அல்லது நட்டங்கள் பொருட்களை இனங்கண்டு கொள்ளாமல் இருக்கின்ற போது வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

2.3.5 **உறுதியான சொத்துக்களுக்கான சேதம்**

நிதியல்லாத சொத்துப் பெறுமதியின் குறைவில் ஏதேனும் அவதானிப்புக்கள் உள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வேண்டி ஒத்திவைக்கப்பட்ட வரி வருமானப் பொறுப்பு குழுமத்தில் நிதியல்லாத சொத்துக்களில் நிலவுகின்ற பெறுமதி அவ் அந்த அறிக்கைப்படுத்துகின்ற திகதிக்கு மீளாய்வு செய்யப்படுகின்றது. அவ்வாறானதொரு நிலைமை இருப்பின், சொத்துக்களில் அறவிட்டுக் கொள்ள முடியுமான பெறுமதி மதிப்பீடு செய்யப்படும். காலவரையற்ற பயனுள்ள ஆயுட்காலம் அல்லது இன்னும் பயன்பாட்டில் இல்லாத அருவமான சொத்துகளின் மீட்டெடுக்கக்கூடிய மதிப்பு ஒவ்வொரு ஆண்டும் ஒரே நேரத்தில் மதிப்பிடப்படுகிறது. சொத்தொன்றில் அல்லது நிதி மூல அலகொன்றில் நிலவுகின்ற பெறுமதி அங்கு மதிப்பீடு செய்யப்பட்ட அறவிட முடியுமான பெறுமதியைத் தாண்டிச் செல்வதாயின் பெறுமதி குறைவில் நட்டத்தினை காணலாம். சொத்தொன்றில் அறவிடப்பட முடியுமான பெறுமதியாக அமைவது அங்கு பயன்படுத்தப்படுகின்ற பெறுமதி மற்றும் அதன் சாதாரண பெறுமதியிலிருந்து விற்பனைச் செலவினைக் குறைக்கின்ற போது கிடைக்கின்ற பெறுமதி போன்ற அவற்றின் உயர்பெறுமதிகளாகும். பயன்பாட்டில் காணப்படும் பெறுமதியினைக் (Value in use) கணிப்பிடுகின்ற போது, பணத்தின் தற்காலப் பெறுமதி நிகழ்கால சந்தையின் கணிப்பீட்டினைப் பிரதிபலிக்கின்ற வரிக்கு முன்னரான தள்ளுபடி செய்யப்பட்ட விகிதாசாரத்தினை மற்றும் சொத்துக்கோ அல்லது நிதி அலகிற்கோ விசேட அவதானத்தினைப் பிரயோகித்து மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால நிதிப்பாய்ச்சல்கள் அதனது நிகழ்காலப் பெறுமதிக்கு தள்ளுபடி செய்யப்படுகின்றது.

பெறுமதி குறைவதனை சோதனை செய்யும் நோக்கத்திற்காக தனித் தனியாக சோதனை செய்ய முடியாத சொத்துக்கள் மற்றொரு சொத்துக்களில் இருந்து காசுப் பாய்ச்சலினால் பாரிய அளவில் விடுவிக்கப்படுகின்ற தொடர்ந்தேர்ச்சியாக பயன்படுத்துவதன் ஊடாக காசுப் பாய்ச்சல் உருவெடுக்கின்ற ஆகச் சிறிய அளவிலான சொத்து வகுதியின் பிரிவொன்றில் உள்ளடக்கப்படுகின்றது. பெறுமதி குறைவினால் நட்ட வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

*சொத்துகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திரையறங்கில் உள்ள ரூபா. 1 இன் பெறுமதிக்கு தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் இன்னும் கலைப்பொருட்களாகப் பராமரிக்கப்படுகின்றன.

2.3.6 **அசையா சொத்துக்களை அடையாளம் காணுதல்**

2020 ஆம் ஆண்டில், கொள்வனவு செய்யப்பட்ட அசையாச் சொத்துகளின் செலவீனமாக கணக்கிடப்பட்டுள்ளதோடு, 2021 ஆம் ஆண்டில் அப்பெறுமதி மற்றும் 2021 ஆம் ஆண்டின் கொள்வனவு செய்யப்பட்ட அசையாச் சொத்துக்கள் 20% இன் கீழ் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

| | ரூபா. |
|---|---|
| கலையரங்கிற்கான ஒலிக் கலவை மென்பொருள் -5.1 | 1,207,350.00 |
| கணனி மென்பொருள் | 480,000.00 |
| பதிப்பித்தல் அமைப்பு – கலையகம் | 799,600.00 |
| | 2,486,950.00 |

2.4 **முடிவுறாத பணிகள்**

**கட்டடங்கள்**

- லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் அருங்காட்சியகம் 16:- 03 கட்டங்களாக பணிகளை நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளதோடு, இதுவரை முதற் கட்டப் பணிகளின் ஒரு பகுதி நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- கலையகத்தின் வர்ண செயலாக்க அமைப்புக் கலையகம் ஒன்றினை நிறுவுதல் – 2022 ஆம் ஆண்டில் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
- தரங்கணீ திரையரங்கை மேம்படுத்துதல் – 2022 ஆம் ஆண்டில் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
- கடந்த ஆண்டில் நிர்மாணித்து முடிக்கப்பட்ட கட்டடங்களாகப் பட்டியலிடப்பட்டு நிறைவு செய்யப்படாத கலையரங்கங்கள், பணிகள் நிறைவடையாத கட்டடங்கள் முடிக்கப்படாத கட்டடங்களின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

**அலுவலக உபகரணங்கள்**

- கெமரா உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்தல்.
- ஒலிப் பதிவிற்கான உபகரணங்கள் மற்றும் ஒலி வாங்கிகளை கொள்வனவு செய்தல்.

**குளிரூட்டல் செயற்பாடு**

❖ கூட்டுத்தாபனத்தின் புதிய கட்டடத்தின் பிரிவுகளினுள் குளிரூட்டும் சாதனங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**அசையாச் சொத்துக்கள்**

❖ கலையகத்தில் வர்ண செயலாக்க அமைப்பை நிறுவுதல் – 2022 ஆம் ஆண்டில் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

❖ பொது அழைப்பு முறையை நிறுவுதல்.

❖ Web Hosting Solutions வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்.

❖ தரங்கணீ திரையரங்கில் 7.1 ஒலி அமைப்பை மேம்படுத்தல்.

❖ Online Meeting ( Zoom) அமைப்பை நிறுவுதல்.

2.5 **கையிருப்பு**

சகல கையிருப்புச் செலவுகள் அல்லது தேறிய மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி என்ற இரண்டில் குறைந்த பட்சத்திற்கு கணிப்பிடப்படுகின்றது. செலவு முதல் உள்ளே – முதல் வெளியே (FIFO) முறைமையினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது.

2.6 **வருமான வரி**

கூட்டுத்தாபனப் பணியாளர்களின் வேதனங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், செலவுகளின் ஒரு பகுதியை செலுத்துவதற்காக வேண்டி, திரைசேறியில் இருந்து நிதி பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. திரைசேறியில் இருந்து கிடைக்கப்பெறும் நிதிக்காக வரி செலுத்தப்பட வேண்டியதில்லை எனும் அடிப்படையில் வரி செலுத்துவதற்காக வேண்டி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

கூட்டுத்தாபானத்தினால் வருடாந்தம் கிடைக்கப் பெற்ற இலாப வருமான வரியினை செலுத்தியதன் பின்னர் ஏற்பட்ட மேலதிகத்தினால், 24% ஆன அளவு இலாபத்திற்காக வேண்டி வரி செலுத்த வேண்டும் என எமது கருத்தாக அமைந்து காணப்படுவதுடன், அவ் அளவானது காணப்பட வேண்டியது வருமான வரிக்காக மேற்கொண்டசீராக்க நடவடிக்கைகளின் பின்னர் எஞ்சியுள்ளவை தேறிய இலாபமாகும் என்பது எமது நம்பிக்கையாகும்.

2.7 **பிற சொத்துக்கள்**

ஏனைய சொத்துக்களில் மற்றைய கடனாளிகள் மற்றும் கிடைக்கப் பெற வேண்டிய விடயங்கள், முற்பணக் கொடுப்பனவுகள், வைப்புகள், முன்னைய கொடுப்பனவுகள், கிடைக்கப் பெற வேண்டிய வரி என்பன உள்ளடக்கப்படும்.

**(அ) முற்பணக் கொடுப்பனவு, வைப்புகள், முன்னர் செலுத்திய செலவுகள்**

ஒரு நிதியாண்டினை விட மேலதிக காலங்களுக்கான நலன்கள் கிடைக்கப் பெறும் எனக் காணும் யாதேனும் ஒரு தொடர்பினைக் கொண்ட செலவு முற்பணம், வைப்புகள் மற்றும் முன்னர் செலுத்திய செலவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான செலவுகள் கால அடிப்படையில் குறித்த காலப் பகுதியினுள் பதிவழிக்கப்படும்.

**(ஆ) பிற கடனாளிகள்**

ஏனைய கடனாளிகள் செலவிலிருந்து சேதங்களைக் குறைத்துள்ள பெறுமதியாக இனங்காணப்பட்டுள்ளது.

2.8 **பணம் மற்றும் பணத்திற்குச் சமனானவைகள்**

அவற்றின் நியாயமான பெறுமதியில் மாற்றங்கள் ஏற்படுவதனை கவனத்திற் கொள்ள முடியாதளவு அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டு கையகப்படுத்தப்பட்ட திகதி முதல் மூன்று (03) மாத காலங்கள் பூர்த்தி அடைந்த அல்லது அதற்குக் குறைவான கால அளவினைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் குழுமத்தினால் அதன் குறுகிய கால பொறுப்புக்களின் முகாமைத்துவத்திற்காக வேண்டி பயன்படுத்திய பணத் தொகை நிலுவைகள் மற்றும் விண்ணப்பித்த வைப்புக்களின் பணம் மற்றும் பணம் மற்றும் அவற்றுக்குச் சமனான விடயங்களும் உள்ளடங்கும்.

திறைசேரியின் உண்டியல்கள் மற்றும் மீள் விற்பனை உண்டியல்களை கணக்கில் பதியும் போது 03 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான முதலீடுகள் காசுப் பாய்ச்சல் அறிக்கையின் பணம் மற்றும் பணத்திற்குச் சமனான திரவ நிலைச் சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

**ஊழியர் கடன் தொகை**

இலங்கை கணக்கியல் தரநியம இலக்கம் 01 இன் படி 12 மாதங்களினுள் கிடைக்கப்பெற வேண்டிய ஊழியர் கடன் தொகை, நடைமுறைச் சொத்தாக 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தின் பின்னர் அறவிடுவதற்குள்ள பெறுமதி

நடைமுறை அற்ற சொத்தாக வகைப்படுத்தப்பட்டு நிதி நிலைக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| | ரூபா. |
|---|---|
| 12 மாதங்களினுள் கிடைக்கப்பெற வேண்டிய ஊழியர் கடன் தொகை | 321250.00 |
| 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தின் பின்னர் அறவிடப்பட வேண்டிய பெறுமதி | 16,506,775.00 |
| | 16,825,025.00 |

## 2.9 **நிதிப் பொறுப்புகள்**

### 2.9.1 **ஆரம்ப அடையாளம் மற்றும் அளவீடு**

LKAS 39 இற்கு ஏற்ப பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளது. உரிய வகையில் இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதிக்கு அளவிடப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் அல்லது கடன் அல்லது கடனிற்கு கொள்வனவு செய்தலாகும். கூட்டுத்தாபனம் அதன் நிதிப் பொறுப்புக்களின் ஆரம்ப இனங்காணலிற்கு ஏற்ப வகைப்படுத்தலினை நிச்சயித்துள்ளது. சகல நிதிப் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் இனங்கண்டு கொள்வதோடு, கடன் மற்றும் கடனுக்கு கொள்வனவு செய்தலுடன் தொடர்புடைய கடன்தீர் நிதி மூலமாக் கடனினைக் குறைத்தல் முறை பிரயோகிக்கப்படும். இங்கு நேரடியாக தொடர்புபடும் கொடுக்கல் வாங்கல் செலவுகளும் உள்ளடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் நிதிப் பொறுப்புக்களில் வணிக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் உள்ளடங்கும்.

### <u>2.9.2 **பிற்கால அளவீடுகள்**</u>

நிதிப் பொறுப்புக்களை அளவிடல் கீழ்வரும் வகையில் காட்டப்பட்டுள்ள அவற்றின் வகைப்பாட்டுக்கு ஏற்ப அமைந்துள்ளது.

### 2.9.3 **இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதி அடிப்படையிலான நிதிப் பொறுப்புக்கள்**

இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதி அடிப்படையிலான நிதிப் பொறுப்புக்களில் வர்த்தகத்திற்காக அமைந்த நிதிப் பொறுப்புக்கள் மற்றும் இலாபங்கள் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் நிதிப் பொறுப்புக்கள் மீது பெயரிடப்பட்டவைகளும் உள்ளடங்குகின்றன. நிதிப் பொறுப்புக்கள், விற்பனைக்கு இருக்கும் பொருட்கள்

வகைப்படுத்தப்படுவது, உடனடி விற்பனை நோக்கத்திற்காக இருந்தால் மாத்திரமேயாகும். வர்த்தகத்திற்கான பொறுப்புகள் மீதான வரவுகள் அல்லது நட்டங்கள் வருமான அறிக்கையில் அடையாளம் காணப்படுகின்றன. கூட்டுத்தாபனம் எந்தவொரு நிதிப் பொறுப்பையும் இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான மதிப்பின் அடிப்படை அடையாளத்தையும் குறிப்பிடவில்லை.

## 2.10 பிற நிதிப் பொறுப்புகள்

கடன் மற்றும் கடனாளியை ஆரம்ப அடையாளம் காணலின் பின்னர் மற்ற நிதி பொறுப்புகளுக்கு கடன்தீர் நிதி மூலமாக கடனினைக் குறைக்கும் முறை பிரயோகிக்கப்படுகின்றது .

### திரட்டப்பட்ட செலவுகள்

| | ரூபா. |
|---|---|
| செலுத்துவதற்குள்ள சம்பளம் | 2,768,123.17 |
| பிற செலவுகள் | 49,440,567.06 |
| இணைய வலையமைப்பு வசதிகளை வழங்கல் | 1,357,000.00 |
| | 53,565,690.23 |

## 2.11 பிற பொறுப்புகள்

ஏனைய பொறுப்புகளில் அட்டுறுச் செலவுகளும் உள்ளடக்கப்படும். இவை அவற்றின் நியாயமான மதிப்பாக மதிப்பிடப்படுகின்றன.

*பிற கடன் வழங்குநர்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய திரைப்பட நிதியத்தின் (NFDF) மூலம் குறிப்பிடுவதானது திரைப்பட மேம்பாட்டு நிதியத்தால் தயாரிக்கப்பட்ட 'வெகந்த வளவ்வ' திரைப்படத்தை தயாரித்துள்ளது. அத்திரைப்படம் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக நிதியத்துக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

**நன்கொடைகளை ஒதுக்குதல்**

இலங்கை கணக்கியல் தரநிலை இலக்கம் 01 இன் படி, ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீட்டில், அடுத்த 12 மாதங்களில் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடை மதிப்பு தற்போதைய பொறுப்புகளாகவும், மீதமுள்ள பணிக்கொடை மதிப்பானது நடப்பு அல்லாத கடன்களாகவும் நிதி அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

| | ரூபா. |
|---|---|
| அடுத்த 12 மாதங்களில் செலுத்த வேண்டிய பணிக்கொடைத் தொகை | 944,610.00 |
| மீதமுள்ள பணிக்கொடை மதிப்பு | 48,057,987.00 |
| | 49,002,597.00 |

2.12 **அரச மானியங்கள்**

சொத்துக்களுக்கான அரசாங்க மானியங்கள் இவை இருப்புநிலைக் குறிப்பிற்கு ஒத்திவைக்கப்படுகின்றன மற்றும் சொத்தின் ஆயுட்காலத்திற்கான வருமான அறிக்கையில் அடையாளம் காணப்படுகின்றன ,செலவுகளை ஈடுகட்ட கிடைக்கும் வரவுகள் மற்றும் வரவுகளின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

**திறைசேரியின் நன்கொடைகளைப் பயன்படுத்தி உரியவகையில் வருவாயை சரியாகக் கண்டறியவும்**.

LKAS 20 இற்கு ஏற்ப சொத்துக்களைக் கட்டியெழுப்புவதற்கு உரித்தான பொது திறைசேரியில் இருந்து கிடைக்கப் பெற்ற உதவுத்தொகைகள் சொத்துக்களின் ஆயுள் காலம் பூராகவும் வருமானத்தில் இனங்கண்டு கொள்ளல். 2019 ஆம் ஆண்டில் அடையாளங் காணப்பட்ட வருமானங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| | ரூபா. சதம் |
|---|---|
| புதிய கட்டிடம் | 1,308,864.04 |
| கட்டிடம் - தலைமை அலுவலகம் | 4,226,511.52 |
| இணையத்தள வசதிகள் | 135,700.00 |
| சினிமாக் கட்டிடத் தொகுதி | 5,072,028.74 |
| பணிக் குழுக்கள் | 149,945.28 |
| ஒலி உபகரணங்கள் | 425,437.56 |
| மிமீ 35 சினிமா படக்காட்சி இயந்திரங்கள் | 135,600.78 |
| ஒலி உபகரணங்கள் | 43,114.42 |
| கேமரா துணைக்கருவிகள் | 68,500.00 |
| 4K வண்ண கலவை சாதனங்கள் | 191,887.50 |
| | 11,757,589.83 |

நிறுவனத்தின் மீண்டுவரும் செலவினத்திற்காக கிடைக்கப்பெற்ற தொகை - ரூபா. 90,000,000.00

நிறுவனத்தின் மூலதனச் செலவினத்திற்காக கிடைக்கப்பெற்ற தொகை - ரூபா. 15,000,000.00

2.13 **ஊழியர் நலன்கள்**

**தீர்மானிக்கப்பட்ட தவணைக் கட்டணத் திட்டம்**

பணியாளர்கள் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளின் படி, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் கீழ் பங்களிப்புகளுக்கு உரிமை உண்டு. கூட்டுத்தாபனத்தினால் ஊழியர்களின் மொத்த ஊதியத்தின் அடிப்படையில் நிலையான பங்களிப்பினை வழங்குவதோடு, இதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் மீது சட்டபூர்வ அல்லது அர்த்தமுள்ள கடப்பாடுகள் எதுவும் இல்லை.

**நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள்**

குறித்த நலன் திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட பங்களிப்புத் திட்டத்திலிருந்து வேறுபடும் வேலைவாய்ப்புக்குப் பிந்தைய நன்மைத் திட்டமாகும். இது தொடர்பாக 1983 ஆம் ஆண்டு இலக்கம் 12 இனைக் கொண்ட பணிக்கொடை சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனம் கட்டுப்பட்டுள்ளது.

2.14 **வருமானம்**

2.14.1 **பிரதான வருமான மூலங்கள்**

01. **உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்பட விநியோக விலைக் கழிவுகள்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்பட விநியோகச் சுற்றறிக்கையின் படி கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்படும் கழிவு விலையாகும்.

02. **அதிகரித்தல் - கூட்டுத்தபான நம்பிக்கை**

படத்தினை திரையிடுவதற்கு ஒரு டிக்கெட்டுக்கு ரூபா. 6 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதிலிருந்து ரூபா. 3.10 தொகை கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெறல் வேண்டும் என்பதோடு, வெளிநாட்டு திரைப்படங்களுக்கு அந்த மொத்த ரூபா. 3.10 தொகையும், உள்நாட்டு படத்தின் மூலம் கிடைக்கப்பெறும் ரூபா. 3.10 உம் ரூபா. 40 உம் அறவிடப்படும்.

03. **மிகை விதிப்பு**

திரையறங்குகளில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய திரைப்பட வாடகை அறவிடப்பட வேண்டிய மிகை விதிப்பாக 75% ஆன தொகை கிடைக்கப்பெறுவதில்லை என்ற அடிப்படையில் 25% மட்டுமே வருமானத்தில் கொள்ளப்பட்டுள்ளது. 2020 ஒக்டோபர் மாதம் முதல் அது 2.5% தொகை 1% ஆக திருத்தப்பட்டுள்ளது.

04. **விசாரணை அபராதத் தொகை**

திரையறங்குகளில் ஏற்பட்டுள்ள மோசடிகளின் படி அபராதத் தொகை அறவிடப்படும்.

05. **விளம்பரத்துக்கான கழிவுகள் மற்றும் சேவைகளுக்கான கழிவுகள்**

திரைப்படங்களில் மற்றும் திரையறங்குகளின் விளம்பர நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டதால் முகவர் நிலையங்களின் மூலம் கூட்டுத்தாபனம் அறவிடும் கழிவுகள் மற்றும் சேவைக் கட்டணங்களாகும்.

06. **கலைக்கூடத்தின் வருமானம்**

திரைப்படங்களின் பிந்தைய தயாரிப்புக்கான (ஒலி மற்றும் தொகுப்பு நடவடிக்கைகள்) இற்காக கலைக்கூடச் சேவைகளை வழங்குவதன் மூலம் அறவிடப்படும் வருமானமாகும்.

2.14.2 **உற்பத்தியாளர் கடன் வட்டி மற்றும் மேலதிகக் கட்டணம்**

தயாரிப்பாளர்களுக்கு கொடுக்கப்படும் கடனுக்கான வட்டி, சம்பந்தப்பட்ட படங்கள் வெளியாகி ஓராண்டு வரை மட்டுமே கணக்கிடப்படுகிறது. ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் கடன் தொகை முழுமையாக அறவிடப்படுமாயின் குறித்த வட்டியும் கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரையரங்குகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகைக்கான வர்த்தமானி அறிவித்தலில் மேலதிகக் கட்டணம் கணக்கிடப்பட்டு கணக்கு காட்டப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் திரைப்படத் தயாரிப்பிற்காக கடன் வழங்கப்படவில்லை.

2.14.3 **திரையிடுவதற்காக விடுவிக்கப்பட்டுள்ள படங்கள்**

படம் திரையிடும் போது வருமானம் வராததால் கடன் தொகை கிடைக்காமல் போனதால், படம் வெளியாகி ஒரு வருடத்திற்குப் பின்னர் வட்டி கணக்கில் காட்டப்பட்டிருக்கிவில்லை.

2.14.4 **திரையிடப்படாத படங்கள்**

(அ) திரைப்படத் தயாரிப்பிற்காக கடன் வழங்கப்பட்டிருந்தும், கடந்த இரண்டு ஆண்டுகளாக சேவைகளைப் பெறாத படங்களுக்குரிய வட்டி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கலையக சேவைகளை வழங்கும்போது நீண்ட காலத்திற்கு சேவைகளைப் பெறாது, தயாரிப்பை நிறுத்தியுள்ள படங்களுக்கான வட்டியும் கணக்கிடப்படவில்லை.

மேற்கூறிய 02 விடயங்களின் கீழ் ஆண்டிற்கான வட்டி கணக்கிடப்படவில்லை என்றாலும், சில சந்தர்ப்பங்களில் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் நேரத்தில் வட்டியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

2.14.5 **கட்டிட வாடகை வருமானம்**

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சொத்தான 224 கட்டிடத்தை தற்காலிகமாக குத்தகைக்கு விடுவதன் மூலம் பின்வரும் நிறுவனங்களிடமிருந்து கட்டிட வாடகை அறவிடப்படுகின்றது.

| | மாதாந்த வாடகை | வருடாந்தம் |
|---|---|---|
| 01 செலசினே நிறுவனம் (நவம்பர் மாதம் வரை) | 527,000.00 | 5,797,000.00 |
| 02. சார்க் கலாசார மத்திய நிலையம் | 345,000.00 | 4,140,000.00 |
| | 872,000.00 | 10,464,000.00 |

**பகிரங்க நாடக கட்டுப்பாட்டுச் சபை**

பணிப்பாளர் சபையின் முடிவிற்கு உட்பட்டு, மாதாந்த கட்டிட வரி வாடகை மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர், 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திடம் வசூலிக்கப்படும் மாதாந்த கட்டிட வரி வாடகை ஒப்பந்தத்தின்படி பெறப்படல் வேண்டும்.

❖ **தொங்கல் கணக்கு**

வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது 2021 திசெம்பர் 31 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்படாத வரவுகளாக முன்வைக்கப்பட்ட தொங்கல் கணக்கின் இருப்பு பின்வரும் மதிப்புகளில் காட்டப்பட்டுள்ளது.

01. ரூபா. 10,000,000 – இலங்கை வங்கிக் கணக்கு 0002323272 கணக்கில் 2021 நவம்பர் மாத வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் அடையாளம் தெரியாத கடனாகக் காட்டப்பட்டுள்ளது.

02. ரூபா. 42,680.00 - மக்கள் வங்கியின் கணக்கு 055-1-001-5-0667533 ஆம் கணக்கில் 2021 திசெம்பர் மாதம் வங்கி கணக்கிணக்க அறிக்கையில் அடையாளம் காணப்படாத கடனாக காட்டப்பட்டுள்ளது.

இந்த வைப்புத் தொகைகள் 2022 ஜனவரி மாதத்தில் கண்டறியப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ **ஊழியர் இழப்பீடு**

2021 ஆம் ஆண்டில், தொழிலாளர் தீர்ப்பாயத்தின் வழக்கு இலக்கம் 13/41/2013 இனைக் கொண்ட வழக்கு விசாரணையின் முடிவை மேன்முறையீடு செய்வதற்காக தொழிலாளர் தீர்ப்பாயத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா. 5,536,866.00 ஆன தொகை ஊழியர்களின் சம்ளம் (குறிப்பு 05) இன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

❖ **வழக்கு விசாரணைகள்**

கூ.ட்டுத்தாபனம் ஒரு தரப்பினராக இருந்து நீதிமன்றத்தில் தற்போது 15 வழக்குகளின் விசாரணை நடவடிக்கைகள் மற்றும் தொழிலாளர் அலுவலகத்தின் 10 முறைப்பாடுகள் தொடர்பில் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

## 2.15 **முந்தைய ஆண்டு இலாபத்தை சரிசெய்தல்**

| **கொடுக்கல் வாங்கலின் இயல்பு** | **பற்று** | **கடன்** | **இருப்பு** |
|---|---|---|---|
| 2021 இல் தாமதங்கள் பற்றிய தினசரி அறிக்கைகளையும் பதிவு செய்தல். (RJ 01-RJ 19, RJ 26,RJ 27, RJ 30, RJ 31) | - | 3,321.12 | (3,321.12) |
| பணிக்கொடை , கணக்காய்வுக் கட்டணம் மற்றும் உரிமை கோராத ஊதியம் பற்றிய கணக்குகளை சரி செய்தல். (GL 63,GL 64,GL 67, GL 68,GL 69,GL 74,GL 75,GL 91,GL 92) | 887,052.08 | 2,302,640.73 | (1,415,588.65) |
| முந்தைய ஆண்டுகளின் வருமானம் மற்றும் செலவுக் கணக்குகளில் உள்ள பிழைகளைத் திருத்துதல். | 178,303.35 | 4,341,450.91 | (4,163,147.56) |
| 2020 இற்குள் நிலையான சொத்துக்களை அடையாளம் காண்பதில் முந்தைய ஆண்டுகளின் தேய்மானக் கழிவுகளுக்கு உரித்தான பதிவுகளைக் குறிப்பிடுதல். | 178,303.35 | 4,341,450.91 | (4,163,147.56) |
| | 1,065,355.43 | 8,334,762.76 | (7,269,407.33) |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான**
**வருமான அறிக்கைகளுக்கான குறிப்புகள்**

| | | | 2021 ரூபா' | 2020 ரூபா' |
|---|---|---|---|---|
| (03) | **விற்பனை** (குறிப்பு 2.14.1.) | | | |
| | திரைப்பட விநியோகம் மூலம் கிடைத்த வருமானம் | 3.1 | 17,073,689 | 15,290,403 |
| | விளம்பரம் மூலம் கிடைத்த வருமானம் | 3.2 | 136,440 | 261,727 |
| | கலையகம் | 3.3 | 446,900 | 1,284,972 |
| | வர்த்தக அலுவல்கள் | 3.4 | 723,353 | 816,570 |
| | | | **18,380,381** | **17,653,672** |

**3.1 திரைப்பட விநியோகம் மூலம் கிடைத்த வருமானம்**

| | | |
|---|---|---|
| உள்நாட்டு திரைப்படங்களுக்கான கழிவுகள் | 1,787,816 | 4,111,913 |
| வெளிநாட்டு திரைப்படங்களுக்கான கழிவுகள் | 12,048,742 | 7,316,881 |
| அதிகரித்தல் - கூட்டுத்தாபனத்தின் மீதான நம்பிக்கை | 2,125,971 | 1,278,847 |
| இதர கட்டணங்கள் | 787,461 | 2,311,291 |
| பரிசோதனை தண்டப் பணம் | 323,700 | 271,470 |
| | 17,073,689 | 15,290,403 |

**3.2 விளம்பரம் மூலம் கிடைத்த வருமானம்**

| | | |
|---|---|---|
| விளம்பரத்துக்கான கழிவுகள் - சினே அட்ஸ் | 99,578 | 193,859 |
| சேவைகளுக்கான கழிவுகள் | 36,861 | 67,868 |
| | 136,440 | 261,727 |

**3.3 கலையகம்**

| | | |
|---|---|---|
| ஒலி | 385,425 | 1,282,772 |
| படத்தொகுப்பு | 61,475 | 2,200 |
| | 446,900 | 1,284,972 |

**3.4 வர்த்தக அலுவல்கள்**

| | | |
|---|---|---|
| சினிமா கார்பன் | 127,200 | 70,300 |
| உதிரிப் பாகங்கள் | 50,244 | 87,160 |
| காகிதாதிகள் மற்றும் வெளியீடுகள் | 491,489 | 598,160 |
| உள்ளகப் பயன்பாடு | | |
| உதிரிப் பாகங்கள் | - | - |
| காகிதாதிகளின் செலவுகள் | 54,420 | 60,950 |
| | 723,353 | 816,570 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
## வருமான அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**(04) விற்பனைச் செலவு**

| | காட்சிகள் | திரையரங்குகள் | தயாரிப்புகள் | பொது நிர்வாகச் செலவுகள் | 2021 மொத்தம் | 2020 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா' | ரூபா' | ரூபா' | ரூபா' | ரூபா' | ரூபா' |
| பங்குகள் 2021.01.01 | 5,253,887 | 1,409,412 | - | 5,214,684 | 11,877,983 | 11,301,233 |
| சேர்க்கப்பட்டது - | | | | | | |
| கொள்வனவு மற்றும் பரிமாற்றல்கள் | - | - | | 286,610 | 286,610 | 634,613 |
| | 5,253,887 | 1,409,412 | - | 5,501,294 | 12,164,593 | 11,935,846 |
| குறைக்கப்பட்டது : | | | | | | |
| பங்குகளில் இருந்து இழப்புகள் | - | | | | | |
| பரிமாற்றல்கள் | - | | | | | |
| 2021.12.31 முடிவடையும் இருப்பு | 5,253,887 | 1,409,412 | - | 4,811,813 | 11,475,112 | 11,877,983 |
| | - | - | - | **689,481** | **689,481** | **57,863** |

நீண்ட குறிப்பிற்காக வேண்டி (4-எ) (4-பி) மற்றும் (4-சீ) குறிப்புக்களைப் பார்க்கவும்.

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான**
**வருமான அறிக்கைகளுக்கான குறிப்புகள்**

**(04 - A) விற்பனைச் செலவு**

| காட்சிகள் | பங்குகள் 2021.01.01 | கொள்வனவு செய்தல் | மொத்தம் | பங்கு 2021.12.31 |
|---|---|---|---|---|
| | ரூபா' | ரூபா' | ரூபா' | ரூபா' |
| **ஒளிரூட்டப்பட்ட படங்கள்** | | | | |
| உள்நாட்டு | 3 | - | 3 | 3 |
| மேற்கு | 244 | - | 244 | 244 |
| கிழக்கு | 471 | - | 471 | 471 |
| | 718 | - | 718 | 718 |
| **வெளியிடப்படாத படங்கள்** | | | | |
| உள்நாட்டு | 3,043,931 | - | 3,043,931 | 3,043,931 |
| மேற்கு | 982,492 | - | 982,492 | 982,492 |
| கிழக்கு | 8 | - | 8 | 8 |
| மொத்தம் | 4,026,431 | - | 4,026,431 | 4,026,431 |
| | 4,027,149 | - | 4,027,149 | 4,027,149 |

| | | 2021 | | 2020 |
|---|---|---|---|---|
| | | re' | | re' |
| **பங்கு 2021.01.01** | | - | | - |
| சேர்க்கப்பட்டது | கொள்வனவு | - | | - |
| | | - | | - |
| | | - | | - |
| குறைக்கப்பட்டது ( | பங்குகள் | | | |
| | 2020.12.31 | - | | - |
| | செலவுகள் | - | | - |
| சேர்க்கப்பட்டது | பிற திரைப்படங்கள் | | | |
| **பங்கு 2021.01.01** | | | | |
| I. சதவீத அடிப்படையில் | 259,890 | - | 259,890 | |
| II. சினே சித்தம் | 966,848 | 1,226,738 | 966,848 | 1,226,738 |
| சேர்க்கப்பட்டது ( | செலவுகள் | - | | - |
| | | 1,226,738 | | 1,226,738 |
| குறைக்கப்பட்டது ( | | | | |
| | பரிமாற்றல்கள் | | | |
| **பங்கு 2021.12.31** | | | | |
| I. சதவீத அடிப்படையில் | 259,890 | - | 259,890 | - |
| II. சினே சித்தம் | 966,848 | 1,226,738 | 966,848 | 1,226,738 |
| **மொத்த செலவுகள்** | | - | - | - |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
## வருமான அறிக்கைகளுக்கான குறிப்புகள் ( பொது நிர்வாகம்)

**(04 - B)** விற்பனைச் செலவு

| | எதிர்மறைகள் | சினிமா காபண்ட | திரிப் பாகங்கள் | இரசாயனங்கள் | காகிதாதிகள் | மொத்தம் 2021 | மொத்தம் 2020 |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா' | ரூபா' | ரூபா' | ரூபா' | ரூபா' | ரூபா' | re' |
| ஆரம்பப் பங்கு 2021.01.01 | 287,951 | 991,233 | 266,683 | - | 3,668,817 | 5,214,684 | 4,637,934 |
| சேர்க்கப்பட்டது( கொள்வனவும் பரிமாற்றங்களும் | - | - | - | - | 286,610 | 286,610 | 634,613 |
| | 287,951 | 991,233 | 266,683 | - | 3,955,427 | 5,501,294 | 5,272,547 |
| சேர்க்கப்பட்டது( இழக்கப்பட்ட பங்குகள் | | | | | | | |
| 2021.12.31 இறுதி பங்குகள் | 287,951 | 897,959 | 238,425 | - | 3,387,477 | 4,811,813 | 5,214,684 |
| | **-** | **93,274** | **28,258** | **-** | **567,949** | **689,481** | **57,863** |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
## வருமான அறிக்கைகளுக்கான குறிப்புகள் ( கலையகம்)

**(04 - C)** **விற்னைச் செலவு**

| | எதிர்மறைகள் | னிமா கார்ப | திரிப் பாகங்க | இரசாயனங்க | மொத்தம் 2021 | மொத்தம் 2020 |
|---|---|---|---|---|---|---|
| | re' | re' | re' | re' | re' | re' |
| ஆரம்பப் பங்கு - 2021.01.01 | 816,569 | - | 538,753 | 54,090 | 1,409,412 | 1,409,412 |
| கொள்வனவு | - | - | - | - | - | - |
| | 816,569 | - | 538,753 | 54,090 | 1,409,412 | 1,409,412 |
| குறைக்கப்பட்டது ( | | | | | | |
| சேதமடைந்த பங்கு | - | - | - | - | - | - |
| பரிமாற்றல்கள் | - | - | - | - | - | - |
| 2021.12.31 முடிவடையும் இருப்பு | 816,569 | - | 538,753 | 54,090 | 1,409,412 | 1,409,412 |
| வருடத்திற்கான உள்ளகப் பயன்பாடு | - | - | - | - | - | - |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
## வருமான அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**குறிப்பு ( 05**

| | 2021<br>ரூபா' | 2020<br>ரூபா' |
|---|---|---|
| **பணியாளர்களின் ஊதியம்** | | |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 51,807,354 | 56,582,591 |
| மேலதிக நேர, விடுமுறை மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் | 8,521,229 | 3,195,671 |
| E P F மற்றும் E T F க்கான பங்களிப்புகள் | 11,342,867 | 11,484,865 |
| மற்ற கொடுப்பனவுகள் | 17,838,122 | 20,479,225 |
| | 89,509,572 | 91,742,352 |

**குறிப்பு ( 06**

**பிரயாண மற்றும் பிழைப்பூதியக் கொடுப்பனவு**

| | | | |
|---|---|---|---|
| பயணச் செலவுகள் | ^ உள்நாட்டு & | 49,453 | 62,254 |
| | ^ வெளிநாட்டு & | - | - |
| வாழ்வாதாரக் கொடுப்பனவு | | 378,908 | 409,378 |
| | | 428,361 | 471,632 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
## வருமான அறிக்கைகளுக்கான குறிப்புகள்

### குறிப்பு ( 07

| வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 2021<br>ரூபா' | 2020<br>ரூபா' |
|---|---|---|
| காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,563,315 | 756,815 |
| மின்சாரம் | 3,766,120 | 4,071,635 |
| சிற்றுண்டி | 134,240 | 211,101 |
| மின் உபகரணங்கள் | 173,656 | 64,148 |
| | 5,637,331 | 5,103,699 |

### குறிப்பு ( 08

### பழுதுபார்ப்பு, பராமரிப்புகள் மற்றும் தேய்மானம்

| எரிபொருள் மசகு எண்ணெய் மற்றும் வாகனங்களின் பராமரிப்பு | | |
|---|---|---|
| காப்புறுதி - மோட்டார் வாகனம் | 129,880 | 336,033 |
| எரிபொருள் கட்டணங்கள் | 1,093,643 | 1,784,462 |
| வாகன பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்பு | 2,044,896 | 1,224,367 |
| வாகன அனுமதிப் பத்திரங்கள் | 46,730 | 57,120 |
| கொள்வனவுகள்- மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் | 173,356 | 189,792 |
| பராமரிப்பு | 3,276,184 | 2,063,649 |
| தேய்மானம் ( குறிப்பு 11) | 18,510,514 | 17,179,605 |
| | 25,275,202 | 22,835,028 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
## வருமான அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**குறிப்பு ( 09**

| | 2021 ரூபா' | 2020 ரூபா' |
|---|---|---|
| **போக்குவரத்து, இணைப்புகள், கோரிக்கைகள் மற்றும் பிற** | | |
| **போக்குவரத்து** | 160,761 | 103,271 |
| **இணைப்புகள்** | 1,419,122 | 1,365,084 |
| **கோரிக்கைகள்** | | |
| உள்ளகப் பயன்பாடு | 54,420 | 60,950 |
| நலன்புரிச் செலவுகள் | 2,236,902 | 2,055,483 |
| ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி | 81,043 | 21,370 |
| நீர் விலைப்பட்டியல் | 144,595 | 178,238 |
| கலந்துரையாடல்களும் மாநாடுகளும் | 78,970 | 118,600 |
| திரைப்படங்களின் பாதுகாப்பு | 165,239 | 651,527 |
| வரிப்பண வரி | 829,313 | 829,313 |
| **பிற சேவைகள்** | | |
| இயக்குநர் குழு மற்றும் கணக்காய்வுக் குழுக்களின் செலவுகள் | 793,906 | 783,746 |
| விளம்பரம் | 421,247 | 462,235 |
| சிறப்பு முகவர் நிறுவனம் | 186,971 | 303,529 |
| ஒழுக்காற்று விசாரணைகளுக்கான கட்டணங்கள் | 372,205 | 199,900 |
| சட்டக் கட்டணங்கள் | 213,106 | 1,440,916 |
| கூட்டுத்தாபனத்தின் விழாக்கள் | 133,587 | 608,860 |
| வெளிநாட்டு திரைப்பட விழாக்கள் | 37,742 | - |
| கணக்காய்வுக் கட்டணம் | 1,200,000 | 1,104,000 |
| பாதுகாப்புச் சேவைகள் | 7,945,830 | 6,131,460 |
| வங்கிக் கட்டணங்கள் | 60,665 | 65,698 |
| சினிமா கற்கை டிப்ளோமா | 697,965 | 472,579 |
| வெ ளியாட்களின் மரணச் சடங்கு உதவிகள் மற்றும் சினிமா | 340,000 | 668,000 |
| புதிய திரையரங்குச் செலவுகள் | 371,577 | 353,155 |
| திரைக்கதை வாசிப்பு | 138,000 | 34,500 |
| தாமதக் கட்டணங்கள் | 1,423 | 22,451 |
| சுகாதாரச் சேவைகள் | 2,945,688 | 3,363,377 |
| திரைப்பட வகைப்பாட்டுச் செலவுகள் | - | 345,500 |
| புலனாய்வு உத்தியோகத்தர் - கொடுப்பனவு | 375,000 | 337,200 |
| தொழில்நுட்ப ஆலோசனைச் சேவை | 150,000 | - |
| 5.1 ஒலி அமைப்பை நிறுவுதல் - கலையகம் | - | 857,050 |
| | 21,555,276 | 22,937,991 |

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
# 2021.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
# வருமான அறிக்கைகளுக்கான குறிப்புகள்

| குறிப்பு ( 10<br>இதர வருமானம் | 2021<br>ரூபா' | 2020<br>ரூபா' |
|---|---|---|
| பங்கிலாபம் | - | - |
| உற்பத்திக் கடன்களுக்கான வட்டி | - | - |
| ஊழியர் கடன் வட்டி | 679,011 | 878,888 |
| நானாவித வருமானங்கள் | 446,800 | 90,510 |
| வெளிப்புறப் படப்பிடிப்புகள் | 2,300,205 | 3,577,857 |
| தர ஆய்வுகள் | - | 4,000 |
| நிலையான மற்றும் திறைசேரி உண்டியல் வட்டி | 17,388,383 | 20,402,037 |
| திரைப்படப் பதிவுக் கட்டணம் - உள்ளூர் வெளிநாட்டு | 545,000 | 480,000 |
| என்'எப்'சீ' திரையரங்குகளின் வருமானம் | 610,000 | 1,448,375 |
| திரைப்படங்களை பார்ப்பதற்கான கட்டணம் | - | - |
| திரைக்கதைகளுக்கான ஒப்புதல் | 183,500 | 53,000 |
| 224 கட்டிட வாடகை வருமானம் (2.14.5) | 9,937,000 | 8,880,000 |
| பாடநெறிகளுக்கான ரசீதுகள் | 2,580,000 | 115,000 |
| திறைசேரியின் ரசீதுகள் வருமானத்தில் கண்டறிதல் | 11,757,590 | 11,492,198 |
| செலாவனி விகிதங்களை சீராக்கல் | 62,900 | 4,103 |
| விரிவுரை மண்டபத்தின் வாடகை வருமானம் | 43,625 | 41,000 |
| காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைத்த இழப்பீடு | - | 50,050 |
| விளம்பரப் பலகைகள் | 217,500 | 216,375 |
| வருடாந்த பதிவுக் கட்டணம் - வெளிநாட்டு திரைப்பட இறக்குமதியாளர்களுக்கு | 500,000 | 425,000 |
| ஆவணப்படங்களுக்கான ஒப்புதல் | 1,104,000 | 1,308,000 |
| புலனாய்வு உத்தியோகத்தர்களின் ரசீதுகள் | 348,000 | 238,500 |
| | **48,703,513** | **49,704,892** |

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2020.12.31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
## நிதி நிலைக்கான குறிப்புகள்

**குறிப்பு - 11 - நிலையான சொத்துக்கள்**

| சொத்து, இயந்திரங்கள் மற்றும் உ | செலவு | முந்தைய ஆண்டிற் கான செலவுக ளை சரிசெய்த | வருடத்திற் கான சேர்ப்புக்க ள் | செலவு | - திரட்டப்பட் ட தேய்மான ம் | - முந்தை ய ஆண்டி ன் தேய்மா | ஆண்டிற்கா ன தேய்மானம் | திரட்டப்பட்ட தேய்மானம் | ீதறிய பெறும |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021.01.01 | | | 2021.12.31 | 2021.01.01 | | | | 2021.12.31 |
| | ரூபா' | | ரூபா' | ரூபா' | ரூபா' | | ரூபா' | ரூபா' | ரூபா' |
| 01. தீர்வை விலக்கப்பட்ட காணி | 174,343,458 | | - | 174,343,458 | - | | - | - | 174,343,458 |
| 02. தீர்வை விலக்கப்பட்ட கட்டடம் | 147,054,219 | (13,591,245) | 11,124,043 | 144,587,017 | 72,416,505 | | 6,322,738 | 78,739,243 | 65,847,774 |
| 03. சினிமா கட்டடத் தொகுதி | 122,837,432 | | 45,500 | 122,882,932 | 83,842,684 | | 5,072,029 | 88,914,712 | 33,968,220 |
| 04. மின் சினிமா உபகரணங்கள் | 331,451 | | - | 331,451 | 331,449 | | - | 331,449 | 2 |
| 05. தளபாடங்கள், நிறுவுதல் மற்றும் | 23,308,180 | | 170,532 | 23,478,712 | 18,051,710 | | 762,056 | 18,813,766 | 4,664,946 |
| 06. அலுவலக உபகரணங்கள் | 28,900,114 | | 196,090 | 29,096,204 | 20,317,727 | | 1,338,303 | 21,656,030 | 7,440,175 |
| 07. மோட்டார் வாகனங்கள் | 18,182,879 | | - | 18,182,879 | 15,482,876 | | 2,699,995 | 18,182,871 | 8 |
| 08. திரைப்படக் காப்பகப்படுத்தல் | 2,104,455 | | - | 2,104,455 | 1,550,242 | | 210,446 | 1,760,688 | 343,767 |
| 09. சைக்கிள்கள் | 18,281 | | - | 18,281 | 18,277 | | - | 18,277 | 4 |
| 10. திரைப்பட உபகரணங்கள் | 910,689 | | - | 910,689 | 861,390 | | 49,279 | 910,669 | 20 |
| 11. புறத்தெறிவு உபகரணங்கள் | 1,158,152 | | - | 1,158,152 | 725,996 | | 67,795 | 793,791 | 364,361 |
| 12. கலையக இயந்திரங்கள் | 99,038,972 | | 4,640,677 | 103,679,649 | 92,521,699 | | 1,500,307 | 94,022,006 | 9,657,642 |
| 13. திரைப்படக் கல்வி உபகரணங்க | 1,241,350 | | - | 1,241,350 | 1,112,152 | | 124,135 | 1,236,287 | 5,063 |
| 14. நலன்புரி உபகரணங்கள் | 210,677 | | - | 210,677 | 201,246 | | 1,572 | 202,818 | 7,859 |
| | **619,640,309** | **(13,591,245)** | **16,176,842** | **622,225,906** | **307,433,954** | **-** | **18,148,654** | **325,582,607** | **296,643,299** |
| 11A **புலனாகாதவை** | | | | | | | | | |
| புலனாகாத சொத்துக்கள் | - | 1,687,350 | 799,600 | 2,486,950 | | 433,470 | 361,860 | 795,330 | 1,691,620 |
| | **-** | **1,687,350** | **799,600** | **2,486,950** | **-** | **433,470** | **361,860** | **795,330** | **1,691,620** |
| **முடிவுறாத பணிகள் (2.4)** | | | | | | | | | |
| 1 கட்டடங்கள் | 15,863,681 | 2,417,621 | 12,980,019 | 31,261,321 | - | - | - | - | 31,261,321 |
| 2 அலுவலக உபகரணங்கள் | - | - | 634,700 | 634,700 | - | - | - | - | 634,700 |
| 3 குளிரூட்டிகள் | 7,149,211 | - | - | 7,149,211 | - | - | - | - | 7,149,211 |
| 4 புலனாகாத சொத்துக்கள் | - | - | 6,308,291 | 6,308,291 | - | - | - | - | 6,308,291 |
| | **23,012,892** | **2,417,621** | **19,923,010** | **45,353,522** | **-** | **-** | **-** | **-** | **45,353,522** |
| மொத்த சொத்துக்கள் | **642,653,201** | **(9,486,274)** | **36,899,452** | **670,066,378** | **307,433,954** | **433,470** | **18,510,514** | **326,377,938** | **343,688,441** |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதிக்கான
## நிதி நிலைக்கான குறிப்புகள்

| | | 2021 ரூபா' | 2020 ரூபா' |
|---|---|---|---|
| குறிப்புகள் - 12 | | | |
| நீண்ட கால முதலீடுகள் | | | |
| நிலையான வைப்பு | | 195,895,798 | 26,610,169 |
| பங்குகள் மீதான முதடுகள் - அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிடெட் ( ANCL) | | 127,000 | 127,000 |
| (குறிப்பு 2.2.8 ) | | 196,022,798 | 26,737,169 |
| குறிப்பு - 13 | | | |
| குறுகிய கால முதலீடுகள் | | | |
| தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பு - ஊழியர்கள் | | 5,000 | 5,000 |
| REPO வைப்புத்தொகை | | 106,845,577 | 93,345,868 |
| திறைசேரி உண்டியல்கள் | | - | 108,524,164 |
| | | 106,850,577 | 201,875,032 |
| குறிப்பு - 14 | | | |
| பங்குகள் | | | |
| திரைப்படங்கள் | | 5,253,887 | 5,253,887 |
| வர்த்தக அலுவல்கள் | | 4,523,862 | 4,926,733 |
| கலையரங்கம் | | 1,697,363 | 1,697,363 |
| கலையக பராமரிப்பு உதிரிப் பாகங்கள் | | 1,472,575 | 1,472,575 |
| காகிதாதிகள் மற்றும் பிற | | 3,184,904 | 2,331,013 |
| | | 16,132,591 | 15,681,571 |
| மெதுவாக சந்தைப்படுத்தப்படும் மற்றும் சந்தைப்படுத்தப்படாத பங்குகளுக்கான ஒதுக்கீடு | | (8,597,176) | (8,597,176) |
| | | 7,535,416 | 7,084,395 |
| குறிப்பு - -15 | | | |
| கடனாளிகள் | | | |
| திரையரங்குகள் | 375,003,940.22 | | |
| ^-& கூடுதல் கட்டணங்களுக்கான ஒதுக்கீடு | (157,817,044) | | |
| ^-& கடனாளிகளுக்கான குறைபாடுகளை சரிசெய் | (112,250,315.16) | 104,936,581 | 95,645,707 |
| தயாரிப்பாளர்கள் | 81,499,905 | | |
| ^-& தயாரிப்பு கடன் வட்டியின் ஒதுக்கீடு | (4,618,806) | | |
| ^-& கடனாளிகளுக்கான சேதங்களை சரிசெய்த | (63,375,772.70) | 13,505,327 | 15,763,375 |
| | | 118,441,907 | 111,409,083 |
| குறிப்பு - 16 | | | |
| இதர கடனாளிகள் | | | |
| பிற | | | 177,054,722 |
| பெறத்தக்க தள்ளுபடித் தொகை | | 158,256,916 | |
| பெறத்தக்க வட்டி ^நிலையான$ ரிபோ& | | 6,837,861 | |
| பெறத்தக்க கூட்டுத்தாபன நம்பிக்கை நிதி | | 22,191,472 | |
| பெறத்தக்க பணக் கணக்கு 224 | | 12,437,643 | |
| பல்வேறு கடனாளிகளுக்கான இழப்புகளை சரிசெய்தல்^ குறிப்பு 16 ஏa & | | (9,986,195) | (8,852,736) |
| ஊழியர்களுக்கான முற்பணம் | | 1,345,954 | 20,714,077 |
| 12 மாதங்களினுள் பெறத்தக்க ஊழியர் கடன் | | 321,250 | - |
| | | 191,404,901 | 188,916,063 |
| குறிப்பு ( 16 -1 | | | |
| 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தில் அறவிடப்படத்தக்க கட | | 16,506,775 | - |
| | | 16,506,775 | - |

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**
**2021.12.31 ஆந் திகதிக்கான**
**நிதி நிலைக்கான குறிப்புகள்**

**அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கீட்டு அட்டவணை**

குறிப்பு : 16 ஏ

| கடனாளிகள் | மொத்தம் 2020 ரூபா' | ுக் கொள்ளப்படாத ம ட்டெடுக்க முடியாதவை ரூபா' | றிடடுக்க முடியாதவ ரூபா' | 5% ஒதுக்கீடு ரூபா' | மாத்த ஒதுக்கீடுச ரூபா' |
|---|---|---|---|---|---|
| திரையரங்குகள் | 375,003,940 | 98,421,177 | 276,582,763 | 13,829,138 | 112,250,315 |
| தயாரிப்பாளர்கள் | 81,499,905 | 62,421,871 | 19,078,034 | 953,902 | 63,375,773 |
| பிற | 199,723,892 | | 199,723,892 | 9,986,195 | 9,986,195 |
| ஊழியர்களின் கடன்கள் | 18,173,979 | - | 18,173,979 | - | - |
| | **674,401,716** | **160,843,048** | **513,558,668** | **24,769,234** | **185,612,282** |

| | | திரையரங்குகள் | தயாரிப்பாளர்கள் | பிற |
|---|---|---|---|---|
| இருப்பு முன்/ கொ | 183,984,339 | 111,636,986 | 63,494,617 | 8,852,736 |
| இலாபங்களை இலாபக் கணக்கிற்கு மாற்றுதல் | 1,627,943 | 613,329 | (118,845) | 1,133,458 |
| | **185,612,282** | **112,250,315.16** | **63,375,772.70** | **9,986,194.58** |

கடனாளிகளுக்கான குறைபாடுகளை சரிசெய்தல்

| | |
|---|---|
| 2021.01.01 ஆந் திகதிக்கு | 183,984,339 |
| இலாபங்களை இலாபக் கணக்கிற்கு மாற்றுதல் | 1,627,943 |
| இருப்பு பின்$கொ' 2021.12.31 | **185,612,282** |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதிக்கான
## நிதி நிலைமைக்கான குறிப்புகள்

| | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூபா' | ரூபா' |
| குறிப்பு : 17 | | |
| வைப்பும் எதிர்காலக் கொடுப்பனவும் | | |
| வைப்புக்கள் | 3,925,436 | 3,851,112 |
| முற்பணம் செலுத்துதல் | 87,443 | 204,407 |
| நலன்புரி சங்கத்திற்கு இறுதிச் சடங்குகளுக்கான முற்பணம் | - | 17,158 |
| | 4,012,880 | 4,072,676 |
| கிடைக்கப்பெறாத கடன்களுக்கான இழப்பீடுகளைச் சரிசெய்தல் | (653,728) | (653,728) |
| | 3,359,152 | 3,418,948 |
| குறிப்பு : 18 | | |
| பணம் மற்றும் வங்கி இருப்பு | | |
| மக்கள் வங்கி - ந. க. இல. 004-1-001-1-0208647 | 373,994 | 188,442 |
| மக்கள் வங்கி - ந.க. இல. 055-1-001-5-0667533 | 1,046,786 | 756,913 |
| மக்கள் வங்கி - ந. க. இல. 004-1-001-6-0208664 | 2,080,681 | 917,929 |
| இலங்கை வங்கி - ந.க. இல. 0002323272 | 2,218,557 | 4,362,273 |
| இலங்கை வங்கி - ந.க. இல. 0002323131 | 712,999 | 786,200 |
| இலங்கை வங்கி - ந.க. இல. 0002323354 | 19,438,606 | 6,085,060 |
| இலங்கை வங்கி - ந. க. இல. 0002323363 | 3,456,070 | 1,334,998 |
| இலங்கை வங்கி - ந. க. இல. 0005002189 | 2,191,823 | 8,598,724 |
| இலங்கை வங்கி - ந. க. இல. 5152460 | - | - |
| | 31,519,517 | 23,030,540 |
| கையிருப்பில் உள்ள நிதி | | |
| சில்லறைத் தொகை - தலைமை அலுவலகம் | - | - |
| சில்லறைத் தொகை - கலையரங்கம் | - | 25,000 |
| சில்லறைத் தொகை - திரைப்படக் காப்பகம் | 34 | 34 |
| | 34 | 25,034 |
| 03 மாதங்களில் முதிர்ச்சியடையும் வைப்புத்தொகை | | |
| REPO வைப்புத்தொகை | 21,935,375 | 112,074,307 |
| திறைசேரி உண்டியல்கள் | 4,068,536 | 9,615,868 |
| | 26,003,911 | 121,690,175 |
| மொத்தம் | 57,523,462 | 144,745,749 |
| குறிப்பு - 19 | | |
| மானியங்கள் | | |
| திறைசேரி உண்டியல்கள் | 101,651,934 | 102,160,132 |
| ^-& பணப் பெறுமதி நீக்கம் | (11,757,590) | (11,492,198) |
| | 89,894,345 | 90,667,934 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதிக்கான
## நிதி நிலைக்கான குறிப்புகள்

| | | 2021<br>ரூபா' | 2020<br>ரூபா' |
|---|---|---|---|
| குறிப்பு : 20 | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | | | |
| முன் கொண்டு வரப்பட்ட இருப்பு - 2020.01.01 | | 51,335,634 | 42,365,554 |
| 2020 ஆம் ஆண்டுக்கான கூடுதல் ஒதுக்கீடு | | (1,775,311) | - |
| ஆண்டிற்கான ஒதுக்கீடு | | 2,443,174 | 12,457,075 |
| பணச் செலுத்துகை | | (3,000,900) | (3,486,995) |
| | | 49,002,597 | 51,335,634 |
| குறிப்பு : 20-1 | | | |
| எதிர்வரும் 12 மாதங்களின் பின்னர் செலுத்தல் | | 48,057,987 | |
| குறிப்பு ( 20-2 | | | |
| எதிர்வரும் 12 மாதங்களினுள் செலுத்தல் (2022.12.31 வரை) | | 944,610 | |
| குறிப்பு ( 21 | | | |
| வைப்புக்கள் | | | |
| NFC திரையரங்குகளின் பிணை வைப்பு | | 465,272 | 375,272 |
| சிற்றுண்டிச்சாலை வைப்பு | | 30,000 | 30,000 |
| பாதுகாப்பு வைப்பு - | திரையரங்குகள் | 2,326,727 | 2,326,727 |
| | பணியாளர்கள் | 5,000 | 5,000 |
| | திரைப்படக் கூட்டுத்தாபனம் | 7,500 | 7,500 |
| | சினிமாத் திட்டம் | 45,000 | 45,000 |
| | சுகாதாரச் சேவைகள் | 160,000 | 160,000 |
| | | 3,039,499 | 2,949,499 |
| குறிப்பு ( 22 | | | |
| திரைப்பட வாடகை கடன் வழங்குநர்கள் | | | |
| திரைப்பட வாடகை கடன் வழங்குநர்கள் | | 263,037,778 | 251,888,838 |
| ^-& கடன் வழங்குநர்களுக்கான இழப்பீட்டை சரிசெய்தல் | | (18,046,804) | (18,046,804) |
| | | 244,990,974 | 233,842,034 |

## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
## 2021.12.31 ஆந் திகதிக்கான
## நிதி நிலைக்கான குறிப்புகள்

| | 2021 ரூபா' | 2020 ரூபா' |
|---|---|---|
| குறிப்பு ( 23 | | |
| **நிதிப் பொறுப்புகள்** | | |
| திரட்டிய செலவுகள் (2.10) | 53,565,690 | 51,097,862 |
| | 53,565,690 | 51,097,862 |
| குறப்பு ( 24 | | |
| **பிற கடன் வழங்குநர்கள்** | | |
| செலுத்தப்பட வேண்டிய மதிப்பு கூட்டப்பட்ட வரி | 152,612 | 152,612 |
| கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடுகள் | | 5,125,000 |
| இறைவரி ஆணையாளர் ( முத்திரைகள்) | | 47,723 |
| உரிமை கோரப்படாத ஊதியங்கள் | 539,152 | 946,911 |
| E. P. F. | 656,759 | 656,759 |
| E. T. F. | 72,955 | 72,955 |
| இதர கடன் வழங்குநர்கள் | 857,755 | 853,954 |
| ^-& செலுத்தப்படாத பொறுப்புக்களுக்கான ஒதுக்கீடு | (644,840) | (644,840) |
| தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் (2.11) | 3,525,795 | 3,525,795 |
| ரித்மா சேர்கிட் நிர்வாகக் கணக்கு | 5,220,133 | 4,656,588 |
| உழைக்கும் போது வரி செலுத்தல் | 38,253 | 38,253 |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்களுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கு | 577,190 | 577,190 |
| பெறத்தக்க உற்பத்திக் கடன் வட்டிக்கான ஒத | 1,028,122 | 1,028,122 |
| பகிரங்க நாடக கட்டுப்பாட்டுச் சபை | 114,801 | 114,801 |
| சினிமா கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான நிதி கட்டுப்பாட்டுக் கணக்கு | - | 2,618,552 |
| திரைப்படங்களின் மறுசீரமைப்பு | | - |
| சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் | | 976,303 |
| நிச்சயமற்ற கணக்குகள் | 52,680 | - |
| | 12,191,367 | 20,746,679 |

# பணிப்பாளர் சபை - 2021 ஆம் ஆண்டு

| தொடரிலக்கம் | பெயர் | பதவி | முகவரி |
|---|---|---|---|
| 1 | கலாநிதி ஜயந்த தர்மதாஸ | தலைவர் | இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. |
| 2 | திரு. நாலக களுவெவ (2021.02.23 ஆந் திகதி வரை)<br>திரு. மொஹான் சமரநாயக (2021.07.16 ஆந் திகதி முதல்) | தகவல் பணிப்பாளர் நாயகம் - அரசாங்க தகவல் திணைக்களம் | அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பன மாவத்தை, கொழும்பு 05. |
| 3 | திரு. ஷந்திரபால லியனகே | பணிப்பாளர் நாயகம் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம் கொழும்பு 07. |
| 4 | திருமதி. தரணீ அனோஜா கமகே | கலாசார அலுவல்கள் பணிப்பாளர் - கலாசார அலுவல்கள் திணைக்களம் | கலாசார அலுவல்கள் திணைக்களம், 08வது மாடி செத்சிரிபாய, பத்தரமுல்ல. |
| 5 | கலாநதி தம்மிக திஸாநாயக | விரிவுரையாளர் - அழகியற் கலை பல்கலைக்கழகம் | இல.2/2, புரஹல வீடமைப்புத் திட்டம், நைவல, வேயங்கொடை. |
| 6 | பேராசிரியர் கோலித பானு திஸாநாயக (2021.04.07 ஆந் திகதி முதல்) | பீடாதிபதி - பட்டப்பின் பட்ட கற்கைப் பிரிவு, அழகியற் கலை பல்கலைக்கழகம் | இல. 561/1, கல்ஏதன்ட வீதி, கோனவல களனி. |
| 7 | கலாநிதி ரவீந்திர ரண்தெணிய | பிரபல்ய நடிகர் | இலக்கம் 283ஏ, பழைய கண்டி வீதி, தலுகம, களனி. |
| 8 | திரு. தம்மித் பொன்சேகா | பிரபல்ய நடிகர் | இல. 140/33, கலாபுர, டெம்ப்லர்ஸ் பிளேஸ், கலகிஸ்ஸ. |
| 9 | திரு. எஸ்.ரீ. கொடிகார | செயலாளர் - தேசிய பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைஞர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | இல.083B20, இல. 265, Oval View வீடமைப்பு, பெலன்கஸ்துடுவ, பொரல்ல. |
| 10 | திருமதி. டீ.சீ. ஜயதேவ ( திறைசேரிப் பிரதிநிதி) (2021.04.20 ஆந் திகதி வரை) | பணிப்பாளர் - வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம், நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு, தலைமை செயலக அலுவலகம், கொழும்பு 01. |
| | திருமதி. என்.பி.ஏ. ஆர். ஜயவர்தன, (2021.06.28 ஆந் திகதி முதல்) | பணிப்பாளர் - அரச கணக்குகள் திணைக்களம், பொது திறைசேரி - நிதி அமைச்சு, கொழும்பு 01. | அரச கணக்குகள் திணைக்களம், பொதுத் திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01. |
| 11 | திருமதி. வசந்து ஷதுரானி ( பணிப்பாளர் சபை உறுப்பினர் - மேற்பார்வை) | பிரபல்ய நடிகை | இல. 26/2, பாடசாலை மாவத்தை, நாவல, ராஜகிரிய. |

# பணிப்பார் சபை - 2022 ஆம் ஆண்டு

| பெயர் | பதவி | முகவரி |
|---|---|---|
| சட்டத்தரணி திரு. பி.எம். தீபால் ஷந்திரரத்ன (2022.08.08 ஆந் திகதி முதல்) | தலைவர் | இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. |
| திரு. தினித் ஷிந்தக கருணாரத்ன (2022.09.15 ஆந் திகதி முதல்) | அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் - அரசாங்க தகவல் திணைக்களம் | அரசாங்க தகவல் திணைக்களம், கொழும்பு 05. |
| திருமதி. தரணி அநோஜா கமகே (2022.08.10 ஆந் திகதி முதல்) | கலாசார அலுவல்கள் பணிப்பாளர் - கலாசார அலுவல்கள் திணைக்களம் | கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல. |
| திரு. நளின் குமார நிஷ்ஷங்க (2022.08.10 ஆந் | பணிப்பாளர் நாயகம் | இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம், கொழும்பு 07. |
| ஜனாதிபதி சட்டத்தரணி திரு. ஜகத் விக்கிரமநாயக (2022.10.14 ஆந் திகதி முதல்) | ஜனாதிபதி சட்டத்தரணி | 1174, தம்மோதய மாவத்தை, பத்தரமுல்ல. |
| திரு. ஏஷ்லி ரத்னவிபூஷண (2022.08.08 ஆந் திகதி முதல்) | சினிமாத் துறைப் பிரதிநிதி | 118, தெஹிவல, பொரலஸ்கமுவ. |
| திருமதி. சந்தியா தர்ஷனி குணசேகர (நதீஷா குணசேகர) (2022.08.08 ஆந் திகதி முதல்) | சினிமாத் துறைப் பிரதிநிதி | இல.552 பீ, வெஸ்ட்பெரி பார்க், விஜேசிங்க மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல. |
| திரு. பி.பி. எஸ். ஆர். த சில்வா (2022.10.31 ஆந் திகதி முதல்) | பணிப்பாளர் - ( திறைசேரியின் பிரதிநிதி) | வெ ளிநாட்டு வளங்கள் திணைக்களம், செயலகம், ( 3 ஆம் மாடி), கொழும்பு 01. |

தலைவர்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை

---------------------------------------------------------------------------------------------------

1. **நிதிக் கூற்று**

--------------------------

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

-----------------------------------------

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான தகுதியுடைய கூற்று, அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்காக அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் விளைவுகள் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகையையும் காசுப் பாய்ச்சிலினையும் இலங்கை கணக்கீட்டு தர நியம அடிப்படைகளுக்கு அமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ) 02 வங்கிக் கணக்குகள் தொடர்பில், 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள 2022 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள ரூபா. 52,680 ஆன தொகை கண்டறியப்படாத நேரடியாக வங்கியில் வைப்பிலிடுதல், இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 10 இன் பந்தி இலக்கம் 03 மற்றும் 08 இன் படி 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றினுள் சீராக்கமின்றி ஒதுக்குக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 16 இன் 34 ஆம் பந்தியின் படி கூட்டுத்தாபனத்தின் சொத்துகள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி தற்போதைய மாற்றங்களின் அடிப்படையில் அந்த சொத்துகள் 03 வருடங்களுக்கு அல்லது 05 வருடங்களுக்கு ஒரு முறை மீள்கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தும், கூட்டுத்தாபனத்தினால் அந்த சொத்துகள் மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் படி நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு பயனுறுதி ஆயுட் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படவில்லை என்ற காரணத்தினால் அதன் மொத்தம் ரூபா. 171,764,741 ஆன பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்மானமாக இருந்தது, ஆனால் தொடர்ந்தும் பயன்பாட்டில் கொள்ளப்பட்டுள்ளதோடு, தர நியம இலக்கம் 79(ஆ) ஆம் பந்தியின் படி இந்த சொத்துகள் தொடர்பில் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை. அதன்படி, இந்த சொத்துகளின் பயனுறுதி ஆயுட் காலம் தொடர்பில் மதிப்பிடப்பட்ட கோளாறு இலங்கை கணக்கீட்டு தர நியம இல்கம் 08 இன் படி மீள் திருத்தம் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கூட்டுத்தாபனத்தில் மெதுவாக அசையும் மற்றும் அசையாத கையிருப்புகளின் மொத்தப் பெறுமதி ரூபா. 8,597,176 ஆகும். இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 16 இன் 79 (அ) ஆம் பந்தியின் படி செயற்பாட்டில் இல்லாத சொத்துகள் தொடர்பிலான நிதிக் கூற்றுகளில் தேறிய பதிவேட்டின் பெறுமதிக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றாலும், கூட்டுத்தாபன வளாகத்தினுள் மற்றும் அதற்கு வெளியே கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கட்டிடத்தினுள் காணப்படும் செயலற்ற சொத்துகள் மற்றும் காலம் கடந்த பழைய சொத்துகள் தொடர்பில் போதுமானளவு வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இலக்கம் 2019/03/மார்ச்/1175.2.1.9 (6427) இனைக் கொண்ட பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி பகிரங்க நாடக அரங்குச் சபையின் புதிய கட்டிடத்திற்காக 2021 ஆம் ஆண்டிற்கு அறவிடப்பட வேண்டிய கட்டிட வாடகை மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டில் நிதிக் கூற்றில் கணக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கியல் மென்பொருள் (Quick Book) இன் மூலம் பெற்ற நிதி நிலை கூற்றின் படி மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 902,469,609 ஆக இருந்தும், கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைக் கூற்றில் அது ரூபா. 1,041,333,428 ஆன வரை காட்டப்பட்டுள்ளது. கணனி மூல கணக்கியல் மென்பொருள் மூலம் பெற்ற விரிவான வருமானக் கூற்றின் படி ரூபா. 6,715,038 ஆன குறைபாட்டினைக் காட்டுகின்ற போதிலும் , கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விரிவான வருமானக் கூற்றில் அதை ரூபா. 9,415,553 என மிகையாக குறிப்பிடப்பட்டிருப்பதனால் இந்த நிலுவைக்கு இடையில் ரூபா. 154,996,410 ஆன தொகையில் வேறுபாடு நிலவுகின்றது.

(எ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விரிவான அட்டவணைப் படி திரைப்பட வாடகை கடனாளி நிலுவை ரூபா. 395,060,050 ஆக இருந்தாலும், அத்திகதிக்கு பொதுப் பேரேட்டின் படி அந்நிலுவை ரூபா. 375,003,940 ஆக இருப்பதால், அதில் ரூபா. 20,056,110 ஆன தொகை வேறுபாடு இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் செலவீனங்களை தீர்ப்பதற்காக வருமானம் போதுமானதாக இல்லை என்பதனால் 2001 ஆம் ஆண்டிலிருந்து பொதுத் திறைசேரியிலிருந்து ஊழியர் களின் சம்பளம் மற்றும் மூலதனச் செலவுகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தன. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டும் அதற்கு முன்னைய 05 வருடங்களினுள் கூட்டுத்தாபனம் திறைசேரியின் வழங்கல்கள் கிடைக்க முன்னர் தொடர்ச்சியாக செயற்பாட்டு நட்டங்களைப் பெறும் நிலையில் இருந்ததாக அவதானிக்கப்பட்டுள்ளது. தற்போது அரசின் நிதி உதவிகள் மற்றும் குறுகிய கால வைப்பிற்கான கடன் வருமானம் இல்லை என்பதால் கூட்டுத்தாபனத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வது நிச்சயமற்றது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த. நி) இக் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது. அத்தகைய கணக்கீட்டு தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

1.3 **கூட்டுத்தாபனத்தின்** 2021 **ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கிய பிற தகவல்கள்**.

-----------------------------------------------------------------------------------------------------

இந்தக் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிக் கூற்றில் மற்றும் அது தொடர்பில் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், பிற தகவல்கள் எனக் கருதப்படுகின்றது. இந்த பிற தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
நிதிக் கூற்று தொடர்பிலான எனது அபிப்பராயத்தில் பிற தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதோடு அது பற்றி எந்த விதத்திலான சான்றுபடுத்தலோ அல்லது அபிப்பிராயமோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்று தொடர்பாக எனது கணக்காய்விற்கு ஏற்ப, மேற்கூறிய அடையாளம் காணப்பட்ட பிற தகவல்களைப் பெற முடியுமாக இருந்தால் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது பிற தகவல்கள் நிதிக் கூற்றுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொண்ட எனது அறிவிற்கு ஏற்ப அளவு ரீதியாக இணங்காதிருப்பது பற்றி கவனிப்பதும் எனது பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, இங்கு போதுமானளவு பிறழ் கூற்றுகள் பதியப்பட்டுள்ளதாக நான் யூகித்தால், அவற்றை நிவர்த்தி செய்வதற்காக கட்டுப்பாட்டுத் தரப்பினருக்கு அந்த விடயங்களை அறிவித்தல் வேண்டும்.தொடர்ந்து நிவர்த்தி செய்யப்படாது பிழையாக குறிப்பிடப்பட்டிருப்பின், அவற்றினை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் படி என்னால் உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிப்புச் செய்யப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 **நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் கட்டுப்பாட்டுத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------

இந் நிதிநிலை அறிக்கைகள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற வகையிலும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகக் காணப்படுவதோடு, முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் என்ற அடிப்படையில் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைப்பாட்டுக்குரிய விடயங்களை கண்டறிவதற்கும் முகாமைத்துவம் பெறுப்பாக இருக்கும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையுடன் தொடர்புடைய பொறுப்புக்கள், ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 **நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

ஒட்டுமொத்த நிதிக் கூற்றிலும், மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும், குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப்படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுக்கள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும் . பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துவதாயின் அவை முக்கியமானவை என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் சந்தேகங்கள் நிலவுவதாகவும் காணப்படுகின்றது. மேலும்,

- நான் மோசடி அல்லது தவறின் காரணத்தினாலான நிதிக் கூற்றுக்களின் முக்கியமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்காணல் அல்லது மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களின் போது உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு மோசடி அல்லது தகவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துக்களை விடுவித்துக் கொள்வதற்கும், போதிய மற்றும் உசிதமான கணக்காய்வுச் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எனது அபிப்பிராயத்தின் அடிப்படையாகவும் உள்ளது.மோசடியின் விளைவினாலான ஆனால் கண்டறியப்படாத முக்கிய பிறழ் கூற்றின் ஆபத்தானது தவறினாலான ஆபத்தினை விடவும் மிகவும் பாரதூரமானது. ஏனெனில், மோசடியானது கூட்டுச் சக்திக்கும் , உள்நோக்குடைய புறக் கணிப்புக்களுக்கும், பிறழ் கூற்றுக்களுக்கும் அல்லது உள்ளக கட்டுப்பாடு மீறப்படுவதற்கும் காரணமாக அமையும்.

- கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் வினைதிறன் தொடர்பான கருத்தினை முன்வைக்கும் நோக்கத்திற்கல்லாது, சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறைகளை திட்டமிடுவதற்காக கணக்காய்வுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கத்தினை நான் பெற்றுக்கொள்கிறேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டினையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தையும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் நான் மதிப்பீடு செய்கிறேன்.

- நிறுவனமாக தொடர்வதற்கு இயலுமையில் குறிப்பிடத்தக்க சந்தேகம் ஏற்படுத்தும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய முக்கியமான நிச்சயமற்ற தன்மை காணப்படின், கணக்கீட்டின் படி இயங்கும் நிறுவன அடிப்படையை முகாமை பயன்படுத்தும் விதத்திற்கேற்பவும் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் படியும் முடிவெடுக்கின்றேன். முக்கியமான ஏதோவொரு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் முடிவெடுத்தால் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களுக்கான எனது கணக்காய்வாளர் அறிக்கையில் உரிய கவனம் செலுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுவதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியளவில் இல்லாதிருந்தால் எனது கருத்தை மாற்றுமாறு நான் வேண்டப்படுவேன். எனது முடிவுகள் யாவும் எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையில் நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின்

அடிப்படையிலேயே இருக்கும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைகள் நிறுவனம் இயங்கும் நிறுவனமாக தொடர்வதிலிருந்தும் நிறுத்தப்படுவதற்கு காரணமாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு றெய்யப்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையான பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்டுள்ள முக்கிய கணக்காய்வு தேடல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டிலுள்ள குறைபாடுகள் உள்ளடங்கலாக ஏனைய விடயங்களுடன் குறிப்பிடத்தக்க நிர்வாகம் தொடர்பாக சாட்டப்பட்டுள்ளவர்களுடன் நான் கலந்துரையாடுகிறேன்.

## 2. பிற சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

--------------------------------------------------------------------------------------------------------

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவு தவிர்த்து, கணக்காய்விற்காக அவசியப்படும் சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் காட்டும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டிருந்தன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்தினால் முன்னளிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப இவ்வறிக்கையில் 1.2 (ஈ), (உ) மற்றும் (ஔ) என்ற அவதானிப்புக்ளைத் தவிர்ந்து முந்திய வருடங்களில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளையும் உள்ளடக்கியே நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்படும் செயன்முறைகள் மற்றும் பெற்றுக் கொண்ட சான்றின் அடிப்படையில் மற்றும் போதியளவிலான விடயங்களுக்கு வரையறை செய்வதன் மூலம், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன்வைக்கும் அளவுக்கு எதுவும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் ஏவரேனுமொரு உறுப்பினர் அத்தகைய கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஏதேனும் ஒரு ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது வேறு விதத்தில் சாதாரண வியாபார ஏதுக்கு அப்பால் தொடர்பு உள்ளதாகவும்,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்த்து ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புகளுடன் இணங்கியொழுக வில்லை என கூறுவதற்கும்,

| சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிக்குறிப்பு | விபரம் |
|---|---|
| 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் III ஆம் பிரிவு 16(2) ஆம் பந்தி மற்றும் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதி இலக்கம் 01/2020 ஆம் அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக் கூற்றினையும் வரைவிடப்பட்ட வருடாந்த அறிக்கையும் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன்வைக்கப்படல் வேண்டும் என்றாலும், கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்று ஒரு வருடம் தாமதமாகியதன் பின்னரே 2023 பெப்ரவரி மாதம் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| 2020 ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 ஆம் நிதிச் சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தியின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) | குறித்த நிதியாண்டுக்கான பொருட் கணக்கெடுப்பு அறிக்கை அடுத்துவரும் நிதியாண்டின் மார்ச் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். ஆனால், கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டின் பொருட் கணக்கெடுப்பு அறிக்கை ஒரு ஆண்டு தாமதமாகியே 2023 மார்ச் மாத்த்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| 2020 ஒக்டோபர் 02 ஆந் திகதி இலக்கம் 05/2020 ஆம் ஆதன முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 2(அ) மற்றும் (ஆ) ஆம் பந்திகள் | 2021 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக 14 மோட்டார் வாகனங்கள் காணப்பட்டதோடு, 2020 ஆம் ஆண்டிலிருந்தே 06 வாகனங்கள் ஓட்டத்தில் இருந்து நீக்கப்பட்டிருந்தன. 2022 ஆம் ஆண் டில் ஒருமோட்டார் வாகனம் மாத்திரம் பயன்பாட்டில் இருந்துள்ளதோடு, இந்த சுற்றறிக்கையின் படி , பழுதுபார்ப்புச் செய்து மீள பயன்பாட்டில் கொள்ளல் அல்லது பயன்பாட்டில் இல்லாத வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 12 (எ) பிரிவின் படி தேவைப்பாட்டுக்கு ஏற்ப கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த கூட்டுத்தாபனத்தின் அதிகாரம், தத்துவங்கள் மற்றும் அதன் தொழிற்பாடுகளுக்கு இணங்காத வகையில் தொழிற்பட்டுள்ளது எனக் கூறுவதற்கும்.

2.2.3 . 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கள் தவிர்ந்த கூட்டுத்தாபனத்தின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த்தாகவும் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் உரித்துடைய சட்ட விதிகளுக்கு ஏற்புடையதாக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படவில்லை எனவும்,

(அ) திரைப்படங்களை இறக்குமதி செய்தல், விநியோகித்தல் மற்றும் பதிவு செய்தலை முறைமையாக்கும் வகையில் கணினி அமைப்பொன்றை நிறுவுவதற்கான ( E- Ticketing) கருத்திட்டத்திற்கு 2021 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட பாதீட்டு அறிக்கையின் படி ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூபா. 11,000,000 ஆகும். 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு இதன் பௌதீக செயற்திறன் நூற்றுக்கு 40 ஆகும் என்பதோடு, நிதியியல் முன்னேற்றம் நூற்றுக்கு 0 வீதமாகும். குறித்த கருத்திட்டத்தின் தொடக்க பெறுகை நடவடிக்கைகள் விலை மனுக் கோரல் அடிப்படையில் ஒரு நிறுவனத்தை தெரிவு செய்தலை மாத்திரம் மீளாய்வு ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2021 ஆம் ஆண்டில் களனிய தளுகம சரசவி திரையரங்கிற்கான மொத்தம் ரூபா. 857,050 ஆன தொகை செலுத்தப்பட்டு 5.1 அளவில் ஒலிப் பின்னூட்டல் அமைப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த பெறுகை நடவடிக்கையை மேற்கொள்ளும் போது அரசின் பெறுகை வழிகாட்டல் குறிப்பின் 2.5.1 (ஈ) , 4.3.2 மற்றும் 5.3.2 ஆம் பிரிவின் படி முன்கூட்டிய பெறுகை நடவடிக்கை, மொத்த செலவுகளின் மதிப்பீட்டை அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் மனுதாரர்களுக்கு அழைப்பு விடுத்தல் போன்ற பெறுகை நடவடிக்கைகள் பெறுகை வழிகாட்டல் குறிப்பின் படி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.3 **பிற கணக்காய்வு அவதானங்கள்**

(அ) 2021 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக 08 வங்கிக் கணக்குகளின் ஆரம்ப மற்றும் இறுதி நிலுவைக்கு இடையில் சாதாரண மதிப்பீடு காசுப் புத்தகத்தின் படி ரூபா. 26,410,717 ஆகக் காணப்படுவதோடு, வங்கிக் கூற்றின் படி அப்பெறுமதி ரூபா. 31,636,323 ஆக இருந்தது. அப்பணத்தின் ஒரு பகுதியையோ அல்லது குறுகிய கால முதலீட்டில் ஈடுபடுத்தினால் பெறப்படும் மேலதிக வருமானத்தையோ பெற்றுக்கொள்வதற்கு அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு, அப்பணம் நடைமுறைக் கணக்கினுள் செலுத்தும் நோக்கில் தக்க வைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்விற்கு முன்னளிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றின் படி 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு பெறுமதி ரூபா. 53,565,690 ஆன திரட்டப்பட்ட செலவுகளின் பெறுமதி ரூபா. 2,262,126 ஆன திரட்டப்பட்ட செலவுகள் 05 வருட காலத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்களிற்கான கொடுப்பனவுகளுக்கான

செலுத்துகையாகும். இதன் படி திரட்டப்பட்ட செலவுகளை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து காணப்பட்டு வருகின்ற மொத்தம் ரூபா. 923,683 ஆன தொகை செலுத்தப்படாத சம்பளம் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டமைப்பின் மூலம் அடையாளம் காண்பதற்கு அல்லது குறித்த நபர்களுக்கு மீளச் செலுத்துவதற்கு அல்லது வருமானத்தில் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபன கணினி மூலம் கணக்குப் பதிவதற்காக "குயிக் புக்" (Quick Book) மென்பொருள் அமைப்பு 2020 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பப் பிரிவொன்று காணப்படாமை மற்றும் மென்பொருள் அமைப்பின் கண்கானிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்புக்கூறக்கூடிய மேற்பார்வை உத்தியோகத்தர் இன்றி பயன்படுத்தப்பட்ட இந்த அமைப்பிற்காக முறைசார்ந்த உள்ளக நிர்வாக மற்றும் அமைப்பு நிர்வாகப் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கியல் அமைப்புடன் இணைந்ததாக பதிவிடும் புத்தகங்களை பேணிச் செல்லல் 2020 ஆம் ஆண்டிலே இடை நிறுத்தப்பட்டிருந்ததோடு, கடந்த கால தரவுகளையும் தகவல்களையும் அமைப்பினுள் சேர்ப்பதற்கும், அமைப்பிலிருந்து தரவுகளை நீக்குவதற்கும் அமைப்பிடம் காணப்படும் சிறப்பியல்புகள் காரணமாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும் நிதியியல் சார்ந்த எண்ணிக்கை தரவுகளின் நம்பகத் தன்மை தொடர்பிலான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. கணினித் தரவுகளுக்கு மேலதிக பிரதிகள் ( Backup) இனை பாதுகாப்பாக வைத்திராமை மற்றும் அவற்றினை மீள அமைப்பினுள் சேர்க்க முடியாதுள்ளமை , அமைப்பிற்கு திறன்மிக்க வன்பொருள் காணப்படாமை, வெளிவாரி கணக்காய்வு அமைப்பினுள் பிரவேசிப்பதற்குரிய வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக முன்னைய வருடங்களின் கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ள இந்த கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு அமைப்பில் காணப்படும் ஆபத்து நிலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தபானத்தினால் கணக்குப் பதிவிடல், திரைப்பட வாடகை வருமானம் குறித்த அறிக்கை வைத்தல் மற்றும் சம்பளம் உள்ளிட்ட ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் செலுத்துவது தொடர்பில் அறிக்கை வைத்திருப்பதற்காக ஒழுங்கு முறையே குவிக் புக், சீபா மற்றுத் விசுஷுவல் பேசிக் போன்ற பெயருடைய ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற 03 கணினி மென்பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த மென்பொருட்களுக்கிடையில் தரவுகள் மற்றும் தகவல்கள் தன்னிச்சையாக பரிமாற்றம் அடையாததனால் பிறழ்கூற்றுத் தவறுகள் மற்றும் ஊழல்கள் ஏற்படுவதற்கு அதிகளவு வாய்ப்புக்கள் காணப்பட்டதோடு, நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு 2022 ஆம் ஆண்டினுள் முழுமையாக

செயலிழந்ததால், கணினிமயப்படுத்தப்பட்ட உள்ளக நிர்வாகம் மற்றும் அமைப்புக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் குறைந்ததன் காரணமாக கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கியல் எண்ணிக்கையின் தரவுகள் மற்றும் அறிக்கைகளின் நம்பகத்தன்மையற்று இருந்ததோடு, அவை ஒப்பீட்டளவில் பரீட்சித்துப் பாரக்க முடியாதுள்ளது.

(ஊ) 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு திரட்டிய பெறுமானம் ரூபா. 68,456,027 ஆன தொகை 69 திரையரங்குகளின் கடனாளி நிலுவைகளின் உறுதிப்படுத்திய கடிதங்கள் கிடைக்கப் பெறாததனால், திரையரங்குகளை மூடுதல், உடைத்து அகற்றுதல் மற்றும் திரையரங்குகள் அந்த முகவரியில் காணப்படாமை போன்ற காரணங்களினால் நிலுவைகளை உறுதிப்படுத்தும் 27 கடிதங்கள் மீண்டும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்தது. அதன்படி அந்த 27 திரையரங்குகளிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிட முடியாது போன நிலுவைத் தொகை ரூபா. 23,380,463 ஆகும்.

(எ) 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு திரட்டிய பெறுமதி ரூபா. 71,334,541 ஆன தொகை 105 திரைப்பட தயாரிப்புக் கடனாளிகள் மூலம் கடனாளி நிலுவைகளை உறுதிப்படுத்திய கடிதங்களை பெறும் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதோடு, பல்வேறு காரணங்களினால் அந்த கடிதங்களில் 22 கடிதங்கள் கையேற்கப்படாமை காரணமாக மீண்டும் கூட்டுத்தாபனத்திற்கே கிடைக்கப்பெற்றுள்ளது. அதன்படி உறுதிசெய்யப்படாத நிலுவைகள் 22 தயாரிப்பு கடனாளிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட முடியாத உற்பத்தி கடனாளி த் தொகை ரூபா. 20,401,950 ஆன தொகையாக இருந்தது.

(ஏ) 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு திரைப்படத் தயாரிப்பு மற்றும் திரையரங்குகளை நவீனமயப்படுத்தலுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகைகளின் மொத்தம் ரூபா. 81,499,905 ஆன தொகை மற்றும் திரையரங்குகளில் இருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைத் தொகையாக மொத்தம் ரூபா. 375,003,940 இனை உள்ளடக்கிய மொத்த தொகை ரூபா. 456,503,845 ஆன தொகை கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற வேண்டியுள்ளது. அவ்வாறு கிடைக்கப்பெற வேண்டிய மொத்த தொகையின் கூட்டுத்தொகை ரூபா. 333,443,132 ஆன மி கையான மற்றும் சந்தேகத்திற்கிடமான கடனாக ஒதுக்கீடு செய்வதனால் 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு அறவிடப்பட முடியுமான தேறிய கடன் நிலுவை ரூபா. 123,060,713 ஆகும் , அதாவது மொத்த கடனாளிகளில் நூற்றுக்கு 27 வீதமாகும். அந்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக 2021 ஆம் ஆண்டில் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால்

2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு கிட்டிய 10 வருடங்களுக்கு நிலுவைக் கடன் மற்றும் நிலுவைத் தொகை முறைசார்ந்த ஒழுங்கின் அடிப்படையில் அறவிட்டுக் கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றிருந்தது. ஆனால், நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு குழுப் பரிந்துரை 2022 ஆம் ஆண்டில் கணக்காய்வு திகதி வரை வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பதோடு, அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அறிவுறைகளின் படி நிலுவைக் கடன் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவிற்கு உரித்தான குருதுவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஆ.வரை.கொ. 9848 இலக்கம் கொண்ட வரைபட துண்டின் இலக்கம் 01 இன் அளவு ஹெக்டேயர் 1.1235 என்ற காணியில் அமைந்திருந்துள்ளது. இந்த காணியின் சட்டரீதியான உரிமை கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்தப்படாமல் அது கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம் உள்ளிட்ட பல கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அங்கு கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம் நடாத்தப்பட்டு வந்துள்ளது.

(ஓ) கூட்டுத்தபானத்திற்குச் சொந்தமான இலக்கம் 224 இனைக் கொண்ட வளாகத்தில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் முதல் மாடி இலக்கம் 4660 இனை குத்தகை ஒப்பந்தத்திற்கு ஏற்ப 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆந் திகதி வரை ஒரு மாதத்திற்கு ரூபா. 315,000 ஆன தொகைக்கு குத்தகை வாடகை அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் செலசினே ரூபவாஹினி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தம் இற்றைப்படுத்தப்படாமலும் மொத்தம் ரூபா. 12,111,000 ஆன நிலுவைத் வாடகைத் தொகை செலுத்தப்படாமல் கட்டிடம் பயன்படுத்தப்பட்டு 2022 மார்ச் மாதம் 28 ஆந் திகதி கட்டிடத்தை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் மாதம் வரை இந்த நிலுவைக் குத்தகைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, 2022 மார்ச் மாதம் 28 ஆந் திகதியின் பின்னர் இந்த கட்டிடத்தை பயனுறுதி வாய்ந்த செயலுக்கு பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஔ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இலக்கம் 224 இனைக் கொண்ட வளாகத்தில் அமைந்துள்ள ரு மாடிக் கட்டிடம் 2007 ஆம் ஆண்டில் இருந்து பகிரங்க நடாக கட்டுப்பாட்டுச் சபைக்கு குத்தகை வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இரு தரப்பினருக்கும் இடையில் இறுதியாக 2017 ஜனவரி மாதம் 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட இலக்கம் 4711 ஆம் குத்தகை ஒப்பந்தம் 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடைந்திருந்தது. நாடக கட்டுப்பாட்டுச் சபையினால் அந்த குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி அக்கட்டிடத்தை உடைத்து நீக்கி 2576 சதுர அடி கொண்ட புதிய இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தம் இரத்துச்

செய்யப்பட்டு 03 வருடங்களுக்குக் கூடுதலான காலம் கழிந்திருந்தும் , முன்னைய வருட கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இந்த அவதானம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு புதிய கட்டிடத்திற்கான மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்று குத்தகை வாடகை மதிப்பிடப்பட்டு, முறையான குத்தகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, 2021 ஆம் ஆண்டிற்கான நிலுவை குத்தகை தொகையை மதிப்பிடுவதற்கும் அறவிட்டுக் கொள்வதற்கும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) கலாநிதி "லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்" அவர்களின் பெயரில் கூட்டுத்தாபன வளாகத்தில் ஒரு நூதனசாலையையும் நூலகமொன்றினையும் நிர்மாணிப்பதற்காக அதன் நிர்மாண மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா. 99,965,061 ஆன தொகை கூட்டுத்தாபனத்தினால் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்கு இரு தரப்பினரும் ஒப்பந்மொன்றில் கைச்சாத்திட்டு, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆந் திகதி பணிகள் தொடங்கப்பட்டது. இந்த கட்டிட நிர்மாணத்திற்கு மாநகர அபிவிருத்தி அதிகாரசபையினதும், அமைச்சரவை அனுமதியும் இன்றி தொடங்கப்பட்ட இந்த நிர்மாணப் பணிகளுக்கு 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு மொத்தம் ரூபா. 3,134,107 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய வருட கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இந்த நிர்மாணப் பணிகள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கைவிடப்பட்டுள்ள நிலையில், நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துள்ள இந்த கட்டிடத்தில் உள்ள இரும்புக் கம்பிகள் கடுமையான சேதங்களுக்கு உட்பட்டுள்ளதனால் கட்டிடம் அழிவுற்று வருகின்றது.

(ங) 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு பல்வேறு நீதிமன்றங்களில் தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற கூட்டுத்தாபனம் பிரதிவாதியாக 15 வழக்கு நடவடிக்கைகளும், 05 தொழிலாளர் முறைப்பாடுகளும், திரைப்படம் மற்றும் நாடகப் பணிப்பாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அலுவலகத்தில் கோப்பிடப்பட்டுள்ள 09 மனித உரிமைகள் முறைப்பாடுகளும், இறுதி முடிவுகளை வழங்க முடியாது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இந்த விசாரணைகள் பல ஆண்டுகளாக விசாரிக்கப்பட்டு வருகின்றமையினால் கூட்டுத்தாபனத்தின் பல உயர் மட்ட பதவிகள் நிரந் தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் காணப்படாமையினாலும், கூட்டுத்தாபனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் கடமைக் காலம் நீதிமன்ற செயற்பாடுகளுக்காக செலவிடப்படுவதால் கூட்டுத்தாபனத்தின் பணிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணியாக அமைந்துள்ளது.

(ச) களணி தளுகம சரசவி திரையரங்கில் பழைய திரைப்படங்களின் ஒளிப் பதிவு நாடாக்களை பாதுகாப்பதற்காக திரைப்படப் பாதுகாப்புக் கூடத்தை நடாத்திச் செல்லப்பட்டுள்ளது. இந்த திரைப்பட பாதுகாப்புக் கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுச் சோதனையில் அவ்வாறு பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டுள்ள ஒளிப் பதிவு நாடாக்கள் தொடர்பாக எழுத்து மூலம் உறுதிப்படுத்தக்கூடிய ஆதாரங்கள் கணக்காய்வில் முன்வைக்கப்படவில்லை என்பதோடு, பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஒரு சில திரைப்படங்கள் ஒளிப் பதிவு நாடாக்கள் முழுமையாகவோ அல்லது பகுதிளவிலோ காணாமற் போயுள்ளது. பாதுகாப்பு செய்யப்பட்ட ஒளப் பதிவு நாடாக்கள் தொடர்பில் ஒரு பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வரவில்லை என்பதனால் காணாமற் போன ஒ ளிப் பதிவு நாடாக்கள் தொடர்பில் போதுமானளவு விபரங்களை கண்டறிய முடியாதுள்ளது. அந்த ஒ ளிப் பதிவு நாடாக்களை பாதுகாப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஞ) இலங்கைக்கான உயர் தர சினிமாக் கலாசாரத்தை உருவாக்குவதற்காக அவசியப்படும் கலை, கோட்பாட்டு மற்றும் தொழில்நுட்ப ரீதியினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கும் நோக்கினை முன்னிருத்தி திரைப்படவியல் தொடர்பான ஒரு வருட “டிப்ளோமா பாடநெறி” ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் கோவிட் தொற்று நோய் நிலை காரணமாக மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்பதோடு, 2021 ஆம் ஆண்டில் 43 மாணவ மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு 2021 மார்ச் மாதம் 27 ஆந் திகதி பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு 2022 செப்டம்பர் மாதம் 27 ஆந் திகதி இந்தப் பாடநெறி நிறைவு செய்யப்பட்டிருந்து. இந்த டிப்ளோமா சினிமாப் பாடசாலையாக மேம்படுத்துவதற்கு கருத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பாடத் திட்டங்களுக்கும் தொகுக்கப்பட்டிருந்தாலும், 2022 ஒக்டோபர் மாதம் வரை இந்த நடவடிக்கைகளை செயற்பாட்டில் கொண்டு வர முடியாதிருந்தது.

(ட) “திரைப்படங்களை விநியோகித்தல் மற்றும் காட்சிப்படுத்தலுக்குரிய முறைமைகள்” தயாரிக்கப்பட்டு அந்த முறைமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2021 ஜூன் மாதம் 22 ஆந் திகதிய மற்றும் இலக்கம் අමප/21/1024/305/022 இனையுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, அந்த அனுமதியின் படி திரைப்பட விநியோகச் செயற்பாட்டினை கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்காக இந்த முறைமை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்தும், ஆனால் 2022 ஒக்டோபர் மாதம் வரை மேற்படி விடயம் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிட்டிருக்கவில்லை.

(ண) களணிய தளுகம சரசவி கலைக்கூடம் அமைந்துள்ள காணியில் உள்ள குட்டையை துப்புரவு செய்து கலைக்கூடத்துக்கு ஏற்றவகையில் பேணிச் செல்வதற்கும், அக்காணியின் ஊடாக வழிந்தோடும் கால்வாயை துப்புரவு செய்து பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.மேலும், கலைக்கூட

வளாகத்தினுள் உடைத்து நீக்கப்பட வேண்டிய சிதைவடைந்த நிலையில் உள்ள ஒரு மாடிக் கட்டிடமொன்றும் காணப்படுகின்றது. திரைக்கூடத்திற்கு உள்நுழையும் வாயிலில் பெயர்ப் பலகையொன்றினைப் பொருத்துவதற்கும், திரைக்கூட வளாகத்தினுள் கலையகத்திற்கு உசிதமான வகையில் கவர்ச்சி மிக்கதாக நடாத்திச் செல்வதற்கும் உயர் மட்ட முகாமைத்துவம் தமது அவதானத்தைச் செலுத்தியிருக்கவில்லை. அத்தோடு மாநகர சுற்றுச்சூழலில் அமைந்துள்ள இந்த திரைக்கூட வளாகம் மற்றும் அதற்குச் சொந்தமான காணியில் கூட்டுத்தாபனத்திற்கு பொருளாதார நன்மைகளைப் பெற முடியுமான பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதனால் செயலற்ற சொத்தாக காணப்படுகின்றது.

(த) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான "தரங்கனீ" திரையரங்கின் நடவடிக்கைகளுக்காக ரூபா. 11,460,155 ஆன தொகை செலுத்தப்பட்டு, 4K DCP புரெஜெக்டரொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அந்த இயந்திரத்தை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்காக அவசியப்படும் உதிரிப் பாகங்கள் 2022 ஆம் வருடம் வரையில் கொள்வனவு செய்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடியாமல் போயுள்ளது. இந்த புரெஜெக்டரினை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு முடியாதுள்ளதால் அதனை கொள்வனவு செய்வதற்கு செலவாகிய தொகையையும் "தரங்கனீ" திரையரங்கு செயலற்ற சொத்தாக மாறியுள்ளது.

(ந) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்படும் திரைப்படங்களை விநியோக்கிப்பதில் ஏகபோக உரிமையை 1999 ஆம் ஆண்டில் இரத்துச் செய்தவுடன் கூட்டுத்தாபத்தின் முக்கிய வருமானமான விநியோக விலைக்கழிவு தொகை இழக்கப்பட்டுள்ளதோடு, கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக திரையரங்குகள் மூடப்பட்டதால் கூட்டுத்தாபனத்தின் வருமான வழி இழக்கப்பட்டிருந்தது. நிலுவைக் கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கும் கூட்டுத்தாபனத்தினால் முடியாது போனதன் காரணமாக காசுப் பாய்ச்சலில் பலவீனம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது.

டப்ளியூ.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வு தலைமை அதிபதி